# மாணவ தோழன்

## ஏழாம் வகுப்பு

### முதல் பருவம்

(2020 - 21)

## சமூக அறிவியல்

**வினா விடைத் தொகுப்பு**



# பொருளடக்கம்


| அலகு | வரலாறு | பக்க எண் |
|---|---|---|
| 1 | இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள் | 3 |
| 2 | வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம் | 5 |
| 3 | தென்இந்தியப் புதிய அரசுகள்<br>பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும் | 9 |
| 4 | டெல்லி சுல்தானியம் | 11 |
| | புவியியல் | |
| 1 | புவியின் உள்ளமைப்பு | 14 |
| 2 | நிலத்தோற்றங்கள் | 18 |
| 3 | மக்கள்தொகையும், குடியிருப்புகளும் | 21 |
| | குடிமையியல் | |
| 1 | சமத்துவம் | 26 |
| 2 | அரசியல் கட்சிகள் | 27 |
| | பொருளியியல் | |
| 1 | உற்பத்தி | 30 |


**ஆக்கம்**


சி.மகேந்திரன், M.A, B.Ed
பட்டதாரி ஆசிரியர் - சமூக அறிவியல்
அரசு உயர்நிலைப்பள்ளி - பரிகம்,
தர்மபுரி மாவட்டம்


தங்களின் மேலான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் வரவேற்கப்படுகிறது.

# வரலாறு

## அலகு - 1 இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்:**

1. ____________ என்பவைபாறைகள், கற்கள், கோவில் சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது செதுக்கப்படும் வாசகங்களாகும்.
அ. காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள் ஆ. பயணக்குறிப்புகள்
இ. நாணயங்கள் **ஈ. பொறிப்புகள்**

2. கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ____________ ஆகும்.
அ. வேளாண்வகை ஆ. சாலபோகம் இ. பிரம்மதேயம் **ஈ. தேவதானம்**

3. ____________ களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.
**அ. சோழர்** ஆ. பாண்டியர் இ. ராஜபுத்திரர் ஈ. விஜயநகர அரசர்கள்

4. முதல் டெல்லி சுல்தான் பற்றிய தகவல்களைக் கூறும் நூல் ____________ ஆகும்.
அ. அயினி அக்பரி **ஆ. தாஜ் - உல் - மா-அசிர்**
இ. தசுக்-இ-ஜாஹாங்கீரி ஈ. தாரிக்- இ - பெரிஷ்டா

5. அராபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்தமொராக்கோநாட்டு அறிஞர் __________ ஆவார்.
அ. மார்க்கோபோலோ ஆ. அல் -பரூனி இ. டோமிங்கோபயஸ் **ஈ. இபன் பதூதா**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. __________ கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது.
2. தன்னுடைய தங்க நாணயங்கள் மீது பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதித்து தன்னுடைய பெயரையும் பொறித்தவர் __________ ஆவார்.
3. ஒரு __________ என்பது 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டிருந்தது.
4. அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதீன் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர்________ ஆவார்.
5. கி.பி.1420 இல் விஜயநகருக்கு வருகை புரிந்த இத்தாலியப் பயணி __________ ஆவார்.

**விடைகள்: 1. உத்திரமேரூர் 2. முகமது கோரி 3. ஜிட்டல் 4. மின்கஜ் உஸ் சிராஜ் 5. நிகோலோ கோண்டி**

**III. பொருத்துக:**

1. கஜுராகோ - ஒடிசா
2. கொனாரக் - ஹம்பி
3. தில்வாரா - மத்தியப்பிரதேசம்
4. விருப்பாக்சா - ராஜஸ்தான்

**விடைகள்: 1 - மத்தியப்பிரதேசம் 2 - ஒடிசா 3 - ராஜஸ்தான் 4 - ஹம்பி**

**IV. சரியா? தவறா?**

1. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும். - **சரி**
2. நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் அரசியல் நிலை குறித்த தகவல்களை நமக்கு வழங்குகின்றன. - **தவறு**
3. தாமிரத்தின் விலை அதிகமாக இருந்ததால் அரசு ஆணைகளையும் அரசவை நிகழ்வுகளையும் பதிவு செய்வதற்கு குறைந்த செலவிலான பனையோலைகளும் காகிதமும் பயன்படுத்தப்பட்டன. - **சரி**

4. டோமிங்கோபயஸ் எனும் போர்த்துகீசியப் பயணி கி.பி.1522 இல் சோழப் பேரரசுக்கு வருகை புரிந்தார். - **தவறு**

**V. (அ) கூற்றைக் காரணத்தோடு பொருத்துக:**

**கூற்று:** முகமதுகோரி தனது தங்க நாணயங்களில் பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதிப்பித்தார்.

**காரணம்:** இத்துருக்கிய படையெடுப்பாளர் மத விசயங்களில் தாராள மனப்பான்மை கொண்டவராய் இருந்தார்.

**அ. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.**

ஆ. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

இ. கூற்று தவறு, காரணம் சரி.

ஈ. கூற்று, காரணம் இரண்டுமேதவறு.

**(ஆ) தவறான இணையைக் கண்டறியவும்:**

1. மதுரா விஜயம் - கங்கா தேவி
2. அபுல் பாசல் - அயினி அக்பரி
3. **இபன் பதூதா - தாகுயூக்-இ- ஹிந்த்**
4. அமுக்தமால்யதா - கிருஷ்ணதேவராயர்

**(இ) பொருந்தாததைக் கண்டுபிடி:**

பொறிப்புகள், **பயணக்குறிப்புகள்,** நினைவுச் சின்னங்கள், நாணயங்கள்.

**VI. ஒரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்**

**1. நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத்தொகுத்தவர் யார்?**

❖ நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத்தொகுத்தவர் நாதமுனி ஆவார்.

**2. 'தசுக்' எனும் வார்த்தையின் பொருள் யாது?**

❖ 'தசுக்' எனும் வார்த்தையின் பொருள் சுயசரிதை ஆகும்.

**3. ஜஹாங்கீர் எழுதிய நினைவுக்குறிப்பின் பெயர் என்ன?**

❖ ஜஹாங்கீர் எழுதிய நினைவுக்குறிப்பின் பெயர் - தசுக் - இ - ஜஹாங்கீரி

**4. வரலாற்றை அறிந்து கொள்வதற்கான இருவகைச் சான்றுகளைக்கூறுக.**

❖ **முதல்நிலைச் சான்றுகள்:** பொறிப்புகள், நினைவுச்சின்னங்கள், நாணயங்கள்

❖ **இரண்டாம் நிலைச் சான்றுகள்:** இலக்கியங்கள், காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள், பயணக்குறிப்புகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், சுயசரிதைகள்

**5. இடைக்காலத்தில் கட்டப்பட்ட முக்கிய மசூதிகளையும், கோட்டைகளையும் பட்டியலிடவும்.**

❖ **மசூதிகள்** : குவ்வத்-உல்-இஸ்லாம் மசூதி, மோத்-கி-மசூதி, ஜமா மசூதி, பதேப்பூர் சிக்ரி தர்கா (டெல்லி), சார்மினார் (ஹைதராபாத்)

❖ **கோட்டைகள்** : ஆக்ரா கோட்டை, சித்தூர் கோட்டை, குவாலியர் கோட்டை, டெல்லி செங்கோட்டை தௌலதாபாத் (ஔரங்காபாத்), பிரோஷ் ஷா கொத்தளம் (டெல்லி)

**6. இடைக்காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த முக்கியமான அயல்நாட்டுப் பயணிகளின் பெயர்களைக் கூறவும்.**

❖ மார்க்கோ போலோ, அல்-பரூனி, இபன் பதூதா, நிகோலோ கோண்டி, அப்துர் ரஸாக், டோமிங்கோபயஸ்.

**VII. விடையளிக்கவும்:**

**1. டெல்லி சுல்தான்கள் அறிமுகம் செய்த பலவகைப்பட்ட நாணயங்களை விவரிக்கவும்.**

- டெல்லி சுல்தான்களின் காலகட்டத்தை அறிந்துகொள்ள 'ஜிட்டல்' என்னும் செப்பு நாணயங்கள் பயன்படுகின்றன.
- இல்துமிஷ் அறிமுகம் செய்த 'டங்கா' எனப்படும் வெள்ளி நாணயங்கள், அலாவுதீன் கில்ஜியின் தங்கநாணயங்கள், முகமதுபின் துக்ளக்கின் செப்பு நாணயங்கள் போன்றவை நாணயங்கள் பரவலான பயன்பாட்டில் இருந்ததையும் நாட்டின் பொருளாதார வளம் அல்லது நலிவு ஆகியவற்றைச் சுட்டுவதாகவும் அமைந்துள்ளன.

**VIII. கட்டக வினாக்கள்:**

| | |
|---|---|
| **1. ________ ,பேரரசர் ஔரங்கசீப்பின் அரசவை அறிஞர் ஆவார்.** <br> **விடை:** கா:.பிகான் | **2. திருவாலங்காடு செப்பேடுகள் ________ காலத்தைச் சேர்ந்ததாகும்.** <br> **விடை:** முதலாம் ராஜேந்திர சோழன் |
| **3. ________ என்பது கல்விக் கூடங்களைப் பாராமரிப்பதற்கான நிலமாகும்.** <br> **விடை:** சாலபோகம் | 4. பெரியபுராணத்தைத் தொகுத்தவர் ________ ஆவார். <br> விடை: **சேக்கீழார்** |
| **5. ________ ஓர் அராபியச் சொல். இதன் பொருள் 'வரலாறு' என்பதாகும் .** <br> **விடை:** தாரிக் (அ) தாகுயூக் | 6. முகமதுபின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கே அமைந்திருந்த ______ க்கு மாற்றினார் <br> விடை: **தேவகிரி** |

**IX. உயர்சிந்தனை வினா:**

**1. "நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதாரச் செழிப்பைச் சுட்டிக் காட்டுகிறது'. விளக்குக.**

- நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றால் ஆனது. உலோகங்களின் மதிப்பானது பேரரசின் பொருளாதாரச் செழிப்பைச் சுட்டிக் காட்டுகிறது.

## அலகு - II வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:**

1. 'பிருதிவிராஜ ராசோ' எனும் நூலை எழுதியவர் யார்?
   அ. கல்ஹணர் ஆ. விசாகதத்தர் இ. ராஜசேகரர் **ஈ. சந்த் பார்தை**

2. பிரதிகார அரசர்களுள் முதல் தலைசிறந்த அரசர் யார்?
   அ. முதலாம் போஜா **ஆ. முதலாம் நாகபட்டர்** இ. ஜெயபாலர் ஈ. சந்திரதேவர்

3. கஜினி என்னும் ஒரு சிறிய அரசு எங்கு அமைந்திருந்தது?
   அ. மங்கோலியா ஆ. துருக்கி இ. பாரசீகம் **ஈ. ஆப்கானிஸ்தான்**

4. கஜினி மாமூதின் படையெடுப்பிற்கு முக்கியக் காரணம் யாது?
   அ. சிலை வழிபாட்டை ஒழிப்பது.
   **ஆ. இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையடிப்பது.**
   இ. இந்தியாவில் இஸ்லாமைப் பரப்புவது.
   ஈ. இந்தியாவில் ஒரு முஸ்லீம் அரசை நிறுவுவது.

**II. கோடிட்டஇடங்களைநிரப்புக:**

1. விக்கிரம சீலா பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தவர்__________ஆவார்.
2. கி.பி __________ இல் சிந்துவை அராபியர் கைப்பற்றினர்.
3. ஆஜ்மீர் நகரத்தை நிர்மாணித்தவர்__________ ஆவார்.
4. காந்தர்யா கோவில் __________ ல் அமைந்துள்ளது.

**விடைகள்:** 1. **தர்மபாலர்** 2. **கி.பி.** 712 3. **சிம்மராஜ்** 4. **மத்திய பிரதேசம்**

**III. பொருத்துக:**

| | அ | ஆ | விடைகள்: |
|---|---|---|---|
| 1 | கஜுராகோ | அபு குன்று | **பந்தேல்கண்ட்** |
| 2 | சூரியனார்கோவில் | பந்தேல்கண்ட் | **கொனாரக்** |
| 3 | தில்வாரா கோவில் | கொனாரக் | **அபு குன்று** |

**IV. சரியா? தவறா?**

1. 'ராஜபுத்ர' என்பது ஒரு லத்தீன் வார்த்தை ஆகும். - **தவறு**
2. அரசர் கோபாலர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். - **சரி**
3. அபுகுன்றில் அமைந்துள்ள கோவில் சிவபெருமானுக்குப் படைத்தளிக்கப்பட்டுள்ளது. - **தவறு**
4. 'ரக் ஷாபந்தன்' சகோதர உறவு தொடர்பான விழாவாகும். - **சரி**
5. இந்தியர்கள் 0 முதல் 9 வரையிலான எண்களை அராபியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். - **தவறு**

**V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க: பொருத்தமான விடையை( √ ) டிக் இட்டுக்காட்டவும்**

1. கூற்று: கன்னோஜின் மீது ஆதிக்கத்தை நிறுவவே மும்முனைப் போராட்டம் நடைபெற்றது.
காரணம்: கன்னோஜ் மிகப்பெரும் நகரமாக இருந்தது.

**அ. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமே.**
ஆ. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.
இ. கூற்று தவறு. காரணம் சரி.
ஈ. கூற்றும் காரணமும் தவறு.

2. கூற்று I. மகிபாலரால் தனது நாட்டை வாரணாசியைக் கடந்து விரிவுபடுத்த முடியவில்லை.
கூற்று II. மகிபாலரும் முதலாம் ராஜேந்திர சோழனும் சமகாலத்தவர் ஆவர்.

அ. I சரி. ஆ. II சரி.
**இ. I மற்றும் II சரி.** ஈ. I மற்றும் II தவறு.

3. கூற்று: இந்தியாவில் இஸ்லாமியக் காலக்கட்டம் கி.பி.(பொ.ஆ) 712 இல் அராபியர் சிந்துவைக் கைப்பற்றிய உடன் தொடங்கவில்லை.
காரணம்: கூர்ஜரப் பிரதிகாரர்கள் அராபியரைக் கடுமையாக எதிர்த்தனர்.

**அ. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.**
ஆ. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ. கூற்று சரி, காரணம் தவறு.
ஈ. கூற்று தவறு, காரணம் சரி.

4. கூற்று : இரண்டாம் தரெய்ன் போரில் பிருதிவிராஜ் தோல்வியடைந்தார்.
காரணம்: ராஜபுத்திரர்களிடையே ஒற்றுமை இல்லை.

**அ. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.**
ஆ. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ. கூற்று சரி, காரணம் தவறு.
ஈ. கூற்று தவறு, காரணம் சரி.

5. கீழ்க்காணும் கூற்றுகளைஆய்க. அவற்றில் எது/எவை சரியானவை என்பதைக் கண்டறியவும்.

1. 'ரக் ஷாபந்தன்' மரபு ராஜபுத்திரர்களுடையது.
2. வங்கப்பிரிவினையின் போது ரவீந்திரநாத் தாகூர் பெருமளவில் மக்கள் பங்கேற்ற 'ரக் ஷாபந்தன்' விழாவைத் தொடங்கினார்.
3. இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரிப்பதற்காக ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிரானதாக இது திட்டமிடப்பட்டது.

அ. கூற்று '1' சரியானது. ஆ. கூற்று '2' சரியானது.
இ. கூற்று '3' சரியானது. **ஈ. மேற்கண்ட அனைத்தும் சரியானவை.**

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்:**

**1. கன்னோஜின் மீதான மும்முனைப் போராட்டம் குறித்து எழுதுக.**

- கூர்ஜரப் பிரதிகாரர்கள், ராஷ்டிரகூடர்கள், பாலர்கள் ஆகியோர் வளம் நிறைந்த கன்னோஜின் மீது அவர்களின் மேலாதிக்கத்தை நிறுவ முயன்றனர்.
- இதனால் ஏற்பட்ட நீண்ட, நெடிய மும்முனைப் போட்டியில் இம்மூன்று சக்திகளும் பலவீனமடைந்தன.

**2. ஏதேனும் நான்கு ராஜபுத்திரக் குலங்களின் பெயர்களை எழுதுக.**

- பிரதிகாரர்கள், சௌகான்கள், சோலங்கிகள், பரமாரர்கள்

**3. பாலர் அரசவம்சத்தை நிறுவியவர் யார்?**

- பாலர் அரசவம்சத்தை நிறுவியவர் கோபாலர் ஆவார்.

**4. தொடக்ககால, முதல் இரு கலிஃபாத்துகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- "உமையத்துகளும்" "அப்பாசித்துகளும்" தொடக்கக்கால கலீஃபத்துகளாகும்.

**5. காசிம் தோற்கடித்த சிந்து மன்னரின் பெயரைக் குறிப்பிடுக.**

- சிந்துவின் அரசர் தாகீர், முகமது பின் காசிமால் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

**VII. கீழ்க்காணும் கேள்விக்கு விடையளிக்கவும்:**

**1. சிந்துவை அராபியர் கைப்பற்றியதன் தாக்கங்கள் யாவை? (ஏதேனும் ஐந்தைக் குறிப்பிடவும்)**

- அராபிய அறிஞர்கள் சிந்துவிற்கு வந்து பல இந்திய இலக்கியங்களைக் கற்றனர்.
- வானியல், தத்துவம், கணிதம், மருத்துவம் தொடர்பாகச் சமஸ்கிருத மொழியிலிருந்த பல நூல்களை அவர்கள் அராபிய மொழியில் மொழியாக்கம் செய்தனர்.
- 0 முதல் 9 வரையிலான எண்களை அவர்கள் இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டனர்.
- ஐரோப்பியர்கள் கணிதம் தொடர்பான அதிக அறிவை அராபியர் வாயிலாகப் பெற்றனர்.
- பூஜ்யத்தின் முக்கியத்துவத்தை அவர்கள் இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டனர்.
- மேலைநாட்டவரும் அராபியர்களும் சதுரங்க விளையாட்டை இந்தியர்களிடமிருந்தே கற்றுக்கொண்டதாக நம்பப்படுகிறது.

**VIII. உயர்சிந்தனை வினா:**

**a) மாமூது கஜினியின் படையெடுப்பிற்கும் முகமது கோரியின் படையெடுப்பிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?**


- மாமூது கஜினி செல்வ வளங்களை கொள்ளையடிப்பதற்காக இந்தியாவின் மீது படையெடுத்தார்.
- முகமது கோரி டெல்லி ஆட்சியை கைப்பற்றுவற்காக இந்தியாவின் மீது படையெடுத்தார்.

b) **கண்டு பிடித்து நிரப்புக:**

| | **முதலாம் தரெய்ன் போர்** | **இரண்டாம் தரெய்ன் போர்** |
|---|---|---|
| **போர் நடைபெற்ற ஆண்டு** | கி.பி.1191 | கி.பி.1192 |
| **போருக்கான காரணங்கள்** | முகமது கோரி பேரரசை விரிவாக்கம் செய்ய | பிருத்திவிராஜ் சௌகானை பழிவாங்க |
| **யார் யாரைத் தோற்கடித்தார்கள்?** | பிருத்திவிராஜ் சௌகான் முகமது கோரியை தோற்கடித்தார் | முகமது கோரி பிருத்திவிராஜ் சௌகானை தோற்கடித்தார் |
| **விளைவு என்ன?** | இரண்டாம் தரெய்ன் போருக்கு வழிவகுத்தது. | இந்தியாவில் துருக்கிய ஆட்சி நிறுவப்பட்டது. |

**X. வரைபட வினா**

இந்திய ஆறுகள் வரைபடத்தில் பிரதிகாரர்கள், சௌகான்கள், பாலர்கள், பரமாரர்கள் ஆண்ட பகுதிகளைக் குறிப்பிடுக.




**XI. கட்டக வினாக்கள்**

| | |
|---|---|
| 1. மாமுது கஜினியால் தோற்கடிக்கப்பட்ட பஞ்சாபின் ஷாகி வம்ச அரசர் யார்? விடை: **ஜெயபாலர்** | 2. ராஜபுத்திர ஓவிய பாணிகள் ________ என்று அழைக்கப்படுகின்றன. விடை: **ராஜஸ்தானி** |
| 3. ராஜபுத்திரக் குலங்கள் எத்தனை இருந்தன? **விடை: 36** | 4. இந்தியாவில் முதல் இஸ்லாமியப் பேரரசை உருவாக்கியவர் யார்? விடை: **முகமது கோரி** |
| **5.** டெல்லியின் முதல் சுல்தான் யார்? விடை: **குத்புதீன் ஐபெக்** | 6. மெக்கா எங்குள்ளது? விடை: **அரேபியா** |

# அலகு - III தென்இந்தியப் புதிய அரசுகள்
# பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:**

1. பிற்கால சோழ வம்சத்தை மீட்டெழச் செய்தவர் யார்?
 **அ. விஜயாலயன்** ஆ. முதலாம் ராஜராஜன் இ. முதலாம் ராஜேந்திரன் ஈ. அதிராஜேந்திரன்

2. கீழ்க்காணும் பாண்டிய அரசர்களுள், களப்பிரர் ஆட்சியை முடித்து வைத்தவர் என அறியப்படுபவர் யார்?
 **அ. கடுங்கோன்** ஆ. வீரபாண்டியன் இ. கூன்பாண்டியன் ஈ. வரகுணன்

3. கீழ்க்காண்பனவற்றுள் சோழர்களின் நிர்வாகத்தில் மிகச் சிறிய அலகு எது?
 அ. மண்டலம் ஆ. நாடு இ. கூற்றம் **ஈ. ஊர்**

4. விஜயாலயன் வழி வந்த சோழ வம்சத்தின் கடைசி அரசர் யார்?
 அ. வீர ராஜேந்திரன் ஆ. ராஜாதிராஜா **இ. அதி ராஜேந்திரன்** ஈ. இரண்டாம் ராஜாதிராஜா

5. சோழர்களின் கட்டடக் கலைக்கான எடுத்துக்காட்டை எங்குக் காணலாம்?
 அ. கண்ணாயிரம் ஆ. உறையூர் இ. காஞ்சிபுரம் **ஈ. தஞ்சாவூர்**

6. கீழ்க்காண்பனவற்றுள் எந்த இந்தியப் பகுதிக்கு மார்க்கோபோலோ 13ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சென்றார்?
 அ. சோழமண்டலம் **ஆ. பாண்டிய நாடு** இ. கொங்குப்பகுதி ஈ. மலைநாடு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ________ தஞ்சாவூரிலுள்ள புகழ்பெற்ற பிரகதீஸ்வரர் கோவிலை நிர்மாணித்தார்.
2. _________வேதக் கல்லூரி ஒன்றை எண்ணாயிரத்தில் நிறுவினார்.
3. __________வேள்விக்குடி செப்பேடுகளின் கொடையாளி ஆவார்.
4. பாண்டியப் பேரரசின் அரசுச் செயலகம் ___________என அறியப்பட்டது.

**விடைகள்: 1. முதலாம் ராஜராஜ சோழன் 2. முதலாம் ராஜேந்திரன்**
**3. ஐடில பராந்தக நெடுஞ்சடையன் 4. முதலாம் வரகுணன் 5. எழுத்து மண்டபம்**

**III. பொருத்துக:**

| | அ | ஆ | விடைகள் |
|---|---|---|---|
| 1 | மதுரை | உள்நாட்டு வணிகர் | **பாண்டியர்களின் தலைநகர்** |
| 2 | கங்கைகொண்ட சோழபுரம் | கடல்சார் வணிகர் | **சோழர்களின் தலைநகர்** |
| 3 | அஞ்சு - வண்ணத்தார் | சோழர்களின் தலைநகர் | **கடல்சார் வணிகர்** |
| 4 | மணி - கிராமத்தார் | பாண்டியர்களின் தலைநகர் | **உள்நாட்டு வணிகர்** |

**IV. சரியா? தவறா?**

1. டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்பட்ட ஒரு முஸ்லீம் அரசு மதுரையில் உருவானது. - **சரி**
2. 'கூடல் நகர்காவலன்' என்பது பாண்டிய அரசரின் பட்டமாகும். - **சரி**
3. சோழ அரசு வைகையின் கழிமுகப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது.-**தவறு**
4. முதலாம் குலோத்துங்கன் சாளுக்கிய - சோழ அரச வம்சத்தைச் சேர்ந்தவர். - **சரி**
5. சோழ அரசரின் மூத்தமகன் யுவராஜன் என அழைக்கப்பட்டார். - **சரி**

**V. கீழ்க்காணும் கூற்றுகளைஆய்க:**
**பொருத்தமான விடையை(√ ) டிக் இட்டுக் காட்டவும்**

1. பிற்காலச் சோழர்கள் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எவை சரியானவை?

1. அவர்கள் ஓர் உள்ளாட்சித்துறைத் தன்னாட்சி அமைப்பைக் கொண்டிருந்தனர்.
2. அவர்கள் வலுவான கப்பற்படையைக் கொண்டிருந்தனர்.
3. அவர்கள் பௌத்தத்தைப் பின்பற்றினர். 4. அவர்கள் பெரிய கோவில்களைக் கட்டினர்.

அ. 1, 2 மற்றும் 3 ஆ. 2, 3 மற்றும் 4 **இ. 1, 2 மற்றும் 4** ஈ. 1, 3 மற்றும் 4

2. ராஜேந்திர சோழனைப் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எவை சரியானவை?
1. அவர் கங்கைகொண்ட சோழன் எனும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்.
2. அவர் தெற்கு சுமத்ராவைக் கைப்பற்றினார்.
3. அவர் சோழர்களின் அதிகாரத்தை நிலைநிறுத்தினார் எனப் போற்றப்படுகிறார்.
4. அவர் ஸ்ரீவிஜயத்தைக் கைப்பற்ற அவருடைய கப்பற்படை உதவியது.

அ. 1 மற்றும் 2 ஆ. 3 மற்றும் 4 இ. 1, 2 மற்றும் 4 **ஈ. இவைஅனைத்தும்**

3. கூற்று : யுவராஜாக்கள் மாநிலங்களின் ஆளுநர்களாகப் பணியமர்த்தப்பட்டனர்.
காரணம்: நிர்வாகத்தில் பயிற்சி பெறுவதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**அ. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.**
ஆ. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ. கூற்று தவறு, காரணம் சரி.
ஈ. கூற்றும் காரணமும் தவறு.

4. கீழ்க்காணும் நிர்வாகப்பிரிவுகளை இறங்குவரிசையில் வரிசைப்படுத்தவும்.
1. நாடு 2. மண்டலம் 3.ஊர் 4. கூற்றம்

**விடை : மண்டலம் - நாடு - கூற்றம் - ஊர்**

5. கீழ்க்காணும் நிகழ்வுகளைக் கால வரிசைப்படி எழுதவும்.
1. மாறவர்மன், வீரபாண்டியனைக் கூட்டு அரசராகப் பணியமர்த்தினார்.
2. உள்நாட்டுப்போர் தொடங்கியது.
3. மதுரையில் ஓர் இஸ்லாமிய அரசு உருவாக்கப்பட்டது.
4. மாறவர்மன் குலசேகரனுக்கு இரண்டு, மகன்கள். ஒருவர்வீரபாண்டியன் மற்றொருவர் சுந்தரபாண்டியன்.
5. சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினார்.
6. மாலிக்கபூர் மதுரையின் மீது படையெடுத்தார்.

**விடை : 4, 1, 2, 5, 6, 3**

**6. கண்டுபிடிக்கவும்:**

| | |
|---|---|
| **பிரம்மதேயம்** | - பிராமணர்களுக்கு சொந்தமான நிலங்கள் |
| **தேவதானம்** | - கோவில்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் |
| **பள்ளிச்சந்தம்** | - சமண சமய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் |
| **வேளாண் வகை** | - வேளாளர்களுக்கு சொந்தமான நிலங்கள் |

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்:**

**1. சோழர்கள் காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் யாவை?**

❖ சந்தனக்கட்டை, கருங்காலிக்கட்டை, சுவையூட்டும் பொருட்கள், விலையுயர்ந்த ஆபரணக் கற்கள், மிளகு, எண்ணெய், நெல், தானியங்கள், உப்பு.

**2. 'சதுர்வேதி மங்கலம்' என எது அழைக்கப்பட்டது?**

❖ அரசர்களும் உள்ளூர் தலைவர்களும் பிராமணர் குடியிருப்புகளை உருவாக்கினர்.
❖ இது 'மங்கலம்' அல்லது 'சதுர்வேதிமங்கலம்' என அழைக்கப்பட்டது.

**3. 'காணிக்கடன்' பற்றி எழுதுக.**

❖ சோழ அரசின் பொதுவருவாய் முக்கியமாக நிலவரி மூலம் பெறப்பட்டது.
❖ நிலவரியானது 'காணிக்கடன்' என அழைக்கப்பட்டது.

VII. **விடையளிக்கவும்:**

1. **சோழர்களின் ஆட்சித்திறம் பற்றிய ஐந்து முக்கிய அம்சங்களை விவரித்து எழுதவும்.**
   - ❖ சோழ அரசர்கள் நன்கு கட்டமைக்கப்பட்ட நிர்வாக முறையைஉருவாக்கியிருந்தனர்.
   - ❖ உள்ளாட்சி நிர்வாகமானது ஊரார், சபையோர், நகரத்தார், நாட்டார் எனும் அமைப்புகளின் மூலமாகச் செயல்பட்டது.
   - ❖ சோழர்கள் காலத்தில் பிரமாண்டமான கோவில்கள் கட்டப்பட்டன. எ.காட்டு: தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம்.
   - ❖ சோழ அரசர்கள் கல்விப்பணிகளுக்குப் பெரும் ஆதரவு நல்கினர்.
   - ❖ சோழர்களின் காலத்தில் கடல் கடந்த வணிகம் தழைத்தோங்கியது.

VIII. **உயர்சிந்தனை வினா:**

**'சோழ அரசர்கள் பெரும் கல்விப் புரவலர்கள்' - இக்கூற்றை உறுதிசெய்க.**

- ❖ சோழ அரசர்கள் கல்விப்பணிகளுக்குப் பெரும் ஆதரவு நல்கினர்.
- ❖ முதலாம் ராஜேந்திரன் எண்ணாயிரம் எனும் கிராமத்தில் வேதக் கல்லூரி ஒன்றைநிறுவினார்.
- ❖ அக்கல்லூரியில் 14 ஆசிரியர்களின் வழிகாட்டுதலில் 340 மாணவர்கள் வேதங்கள், இலக்கணம், உபநிடதங்கள் ஆகியவற்றைக் கற்றனர்.
- ❖ அவருக்குப் பின்வந்த ஆட்சியாளர்கள் அவருடைய அப்பணியை முன் உதாரணமாகக் கொண்டு பின்பற்றினர்.
- ❖ அதன் விளைவாக இன்றைய புதுச்சேரிக்கு அருகேயுள்ள திருபுவனை எனும் ஊரிலும், இன்றைய செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருமுக்கூடலிலும் முறையே 1048, 1067 ஆகிய ஆண்டுகளில் இதே போன்ற கல்லூரிகள் நிறுவப்பட்டன.

## அலகு - IV டெல்லி சுல்தானியம்

I. **சரியான விடையைத் தேர்வு செய்யவும்:**

1. ____________ மம்லுக் அரச வம்சத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.
   அ. முகமது கோரி ஆ. ஜலாலுதீன் **இ. குத்புதீன் ஐபக்** ஈ. இல்துமிஷ்

2. குத்புதீன் தனது தலைநகரை____________ லிருந்து டெல்லிக்கு மாற்றினார்.
   **அ. லாகூர்** ஆ. புனே இ. தௌலதாபாத் ஈ. ஆக்ரா

3. ____________ குதுப்மினாரின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்தார்.
   அ. ரஸ்ஸியா ஆ. குத்புதீன்ஐ பக் **இ. இல்துமிஷ்** ஈ. பால்பன்

4. டெல்லிக்கு அருகே துக்ளகாபாத் நகருக்கான அடிக்கல்லை நாட்டியவர்____________ ஆவார்.
   அ. முகமது பின் துக்ளக் ஆ. பிரோஷ் ஷா துக்ளக் இ. ஜலாலுதீன் **ஈ. கியாசுதீன்**

II. **கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. துக்ளக் அரசவம்சத்தைத் தோற்றுவித்தவர்__________ ஆவார்.
2. முகமது பின்துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து __________ க்கு மாற்றினார்.
3. புகழ்பெற்ற பாரசீகக் கவிஞர் அமிர்குஸ்ருவை __________ ஆதரித்தார்.
4. டெல்லியிலுள்ள குவ்வத் உல் இஸ்லாம் மசூதியை __________ கட்டினார்.
5. இந்தியாவிற்கு செங்கிஸ்கான் தலைமையிலான மங்கோலியரின் அச்சுறுத்தல் __________ ஆட்சியின் போது ஏற்பட்டது.

**விடைகள்: 1. கியாசுதீன் துக்ளக் 2. தேவகிரி 3. பால்பன்**
**4. குத்புதீன் ஐபக் 5. இல்துமிஷ்**

III. **பொருத்துக:**

| | அ | ஆ | விடைகள் |
|---|---|---|---|
| 1 | துக்ரில்கான் | காராவின் ஆளுநர் | **வங்காள ஆளுநர்** |
| 2 | அலாவுதீன் | ஜலாலுதீன் யாகுத் | **காராவின் ஆளுநர்** |
| 3 | பகலூல் லோடி | வங்காள ஆளுநர் | **சிர்கந்தின் ஆளுநர்** |
| 4 | ரஸ்ஸியா | சிர்கந்தின் ஆளுநர் | **ஜலாலுதீன் யாகுத்** |

IV. **சரியா? தவறா?**

1. குத்புதீன் இனங்காண முடியாத காய்ச்சலால் மரணமடைந்தார். - **தவறு**
2. ரஸ்ஸியா திறமைமிக்க, மனவலிமை கொண்ட போர் வீரர். - **சரி**
3. ஐபக்கின் மறைவுக்குப் பின்னர் அவருடைய மகன் இல்துமிஷைத் துருக்கியப் பிரபுக்கள் சுல்தானாகத் தேர்வு செய்தனர். - **தவறு**
4. தக்காண விசயங்களில் தலையிடக்கோரி பாமினி இளவரசர் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்ள பிரோஷ் ஷா மறுத்துவிட்டார். - **சரி**

V. **அ. கூற்றைக் காரணத்தோடு ஒப்பிடுக.**
**சரியான விடையை ( ) டிக் செய்யவும் .**

அ. **கூற்று:** மங்கோலியருடன் பால்பன் சுமூகமான உறவை மேற்கொண்டார்.
**காரணம்**: செங்கிஸ்கானின் பேரனான மங்கோலிய அரசன், சட்லஜ் நதியைக் கடந்து மங்கோலியர் படையெடுத்து வரமாட்டார்கள், என உறுதி கூறியிருந்தார்.

**அ. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமே.**
ஆ. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
இ. காரணமும் கூற்றும் தவறானவை. ஈ. கூற்று தவறு; காரணம் சரி.

**ஆ. சரியான இணையைத் தேர்வு செய்க:**

1. ஹொய்சாளர் - தேவகிரி
2. யாதவர் - துவாரசமுத்திரம்
3. **காகதியர் - வாராங்கல்**
4. பல்லவர் - மதுரை

**இ) தவறான கூற்றினை/ கூற்றுகளைக்கண்டறியவும்**

1. 1206இல் கோரி முகமதுவின் மரணத்திற்குப் பின்னர், அவருடைய அடிமையான குத்புதீன் ஐபக், இந்தியாவிலிருந்த துருக்கியப் பகுதிகளுக்குத் தன்னை அரசனாக அறிவித்துக்கொண்டார்
2. **ரஸ்ஸியா, தனது ஆட்சிக்கு எதிராகச் சதி செய்வோரைப் பற்றியும் இடையூறு ஏற்படுத்துவோர் பற்றியும் செய்திகள் சேகரிக்க ஒற்றர்கள் துறையொன்றை நிறுவினார்**
3. மங்கோலியரின் தாக்குதலிலிருந்து தனது நாட்டைப் பாதுகாக்கப் பால்பன் கோட்டைகளைக் கட்டினார்
4. இப்ராகிம்லோடி 1526இல் பாபரால் தோற்கடிக்கப்பட்டார்.

VI. **கீழ்க்காண்பனவற்றிற்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்**

**1. முறையான ஊதியத்திற்கு மாற்றாக ராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட நிலத்தின் பெயரென்ன?**

- ❖ “இக்தா” என்பது ராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்படவேண்டிய ஊதியத்திற்காகக் கொடுக்கப்பட்ட நிலமாகும்.

**2. ஆக்ரா நகரை நிர்மாணித்தவர் யார்?**

- ❖ ஆக்ரா நகரை நிர்மாணித்தவர் சிக்கந்தர் லோடி ஆவார்.

**3. கி.பி.(பொ.ஆ) 12ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முஸ்லீம் ஆட்சியை நிறுவியர் யார்?**

- கி.பி.(பொ.ஆ) 12ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முஸ்லீம் ஆட்சியை நிறுவியர் முகமது கோரி ஆவார்.

**4. 'சகல்கானி' குறித்து சிறுகுறிப்பு வரைக.**

- இல்துமிஷ் மங்கோலியர்கள் தாக்குதல் மேற்கொண்டால் அதை எதிர்கொள்வதற்காகத் துருக்கியப் பிரபுக்கள் நாற்பதுபேரைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கினார்.
- அக்குழு "சகல்கானி" அல்லது நாற்பதின்மர் என அறியப்பட்டது

**5. அலாவுதீன் கில்ஜி எவ்வாறு டெல்லி சுல்தானியத்தை ஒருங்கிணைத்தார்?**

- பஞ்சாபில் மங்கோலியர்களுக்கு எதிராக, ராஜஸ்தானத்திற்கும் குஜராத்திற்கும் எதிராக என அவருடைய படையெடுப்புகள் வாயிலாக அலாவுதீன் கில்ஜி டெல்லி சுல்தானியத்தை ஒருங்கிணைத்தார்.

**6. பிரோஷ் ஷா துக்ளக்கின் சாதனைகளைப் பட்டியலிடுக.**

- அறக்கட்டளைகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், மசூதிகள் ஆகியவற்றைக் கட்டினார்.
- விவசாயிகளின் கடன்களை ரத்து செய்தும் பல நீர்ப்பாசனக் கால்வாய்களை வெட்டியும் வேளாண்மையை மேம்படுத்தினார்.

**VII. கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிக்கவும்**

**1. 1398 ஆம் ஆண்டில் நடைபெற்ற தைமூரின் படையெடுப்பை விவரி.**

- தைமூர் இந்தியாவின் வலிமையின்மையைச் சாதகமாக்கிக் கொண்டு இந்தியாவிற்குள் படையெடுத்து நுழைந்து 1398 டிசம்பர் மாதத்தில் டெல்லியைக் கொள்ளையடித்தார்.
- தங்கம், வெள்ளி, நகைகள் எனப் பெரும்செல்வத்தைக் கொள்ளையடித்து எடுத்துச் சென்றார்.
- தைமூர் டெல்லியைத் தாக்கிச் சூறையாடி மாபெரும் மனிதப் படுகொலையை அரங்கேற்றினார்.
- தைமூர் தன் நாட்டிற்கு செல்லும் போது சாமர்கண்டில் நினைவுச் சின்னங்களைக் கட்டுவதற்காகத் தச்சுவேலை செய்வோர், கட்டடக் கலைஞர்கள் போன்ற இந்தியக் கைவினைஞர்களையும் உடன் அழைத்துச் சென்றார்.

**VIII. உயர் சிந்தனை வினா**


**1. முகமது பின் துக்ளக்கை டெல்லியின் சுல்தானாக நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**

- முகமது பின்துக்ளக் சுல்தானாக இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.
- முகமது பின்துக்ளக் மிகவும் கற்றறிந்த மனிதர். ஆனாலும் அவர் குரூரம் நிறைந்தவராவார்.
- அவர் இந்திய துணைக்கண்டம் முழுவதையும் தனது நாடாக மாற்றக் கனவு கண்டார்.
- துக்ளக் நிலவரியை உயர்த்தியதோடு அது முதல் நிலவரி பணமாக வசூலிக்கப்பட வேண்டுமென ஆணை பிறப்பித்தார். அது பஞ்சகாலங்களில் பெரும் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தியது.
- செப்பு நாணயங்களை அடையாளப் பணமாக வெளியிட்டார். இதன் விளைவாக ஒட்டு மொத்த வருவாய் நிர்வாகமுறை சீர்குலைந்தது.
- துக்ளக் 1351 மார்ச் 23 இல் மரணமடைந்தார்.

**IX. வரைபட வினா**

**இந்திய ஆறுகள் வரைபடத்தில் துக்ளக் வம்சத்தின் ஆட்சி எல்லையையும் கீழ்க்காணும் பகுதிகளையும் குறிப்பிடுக.**

1. டெல்லி 2. தேவகிரி 3. லாகூர் 4. மதுரை




# புவியியல்

## அலகு - I புவியின் உள்ளமைப்பு

**I. சரியான விடையை தேர்ந்தெடுக்க**

1. நைஃப்_____________ ஆல் உருவாக்கப்பட்டது.

**அ) நிக்கல் மற்றும் ஃபெர்ரஸ்** ஆ) சிலிக்கா மற்றும் அலுமினியம்

இ) சிலிக்கா மற்றும் மெக்னீசியம் ஈ) இரும்பு மற்றும் மெக்னீசியம்

2. நில நடுக்கம் மற்றும் எரிமலைவெடிப்பு_____________ நுனியின் அருகில் ஏற்படுகின்றது.

அ) மலை ஆ) சமவெளிகள் **இ) தட்டுகள்** ஈ) பீடபூமிகள்

3. நில நடுக்கத்தின் ஆற்றல் செறிவின் அளவினை _____________ மூலம் அளக்கலாம்.

அ) சீஸ்மோகிராஃப் **ஆ) ரிக்டர் அளவு கோல்**

இ) அம்மீட்டர் ஈ) ரோட்டோமீட்டர்

4. பாறைக்குழம்பு வெளியேறும் குறுகலான குழாயை_____________ என்று அழைக்கிறோம்.

**அ) எரிமலைத் துளை** ஆ) எரிமலைப் பள்ளம்

இ) நிலநடுக்க மையம் ஈ) எரிமலை வாய்

5. எரிமலைக் குழம்பு கூம்புகள்_____________ ஆகும்.

**அ) மலைகளின் குவியல்** ஆ) மலைகளின் உருக்குலைவு

இ) எஞ்சிய மலைகள் ஈ) மடிப்பு மலைகள்

6. எரிமலைக் குழம்பு மலைகளின் கூம்பில் உள்ள அழுத்தத்திற்கு __________ என்று பெயர்.

**அ) எரிமலைப் பள்ளம்** ஆ) லோப்போலித் இ) எரிமலைக் கொப்பரை ஈ) சில்

7. _____________ பகுதி நெருப்பு வளையம் என்று அழைக்கப்படுகிறது.

**அ) பசிபிக்** ஆ) அட்லாண்டிக் இ) ஆர்க்டிக் ஈ) அண்டார்ட்டிக்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. புவிக்கருவிற்கும் கவசத்திற்கும் இடையே அமையும் எல்லைக்கோடு _____________ என்று அழைக்கப்படுகிறது.
2. நில நடுக்க அலைகளைப் பதிவு செய்யும் கருவியின் பெயர் _________ ஆகும்.
3. பாறைக்குழம்பு வெளியேறி அது பரவிக்கிடக்கும் பகுதி __________ என்று அழைக்கப்படுகிறது.
4. செயல்படும் எரிமலைக்கு உதாரணம் _____________ ஆகும்.
5. எரிமலைகளின் அறிவியல் பூர்வமான ஆய்வுகளை_____________ என அழைக்கின்றனர்.

**விடைகள்: 1. வெய்சார்ட் குட்டன் பர்க் 2. நில அதிர்வுமானி 3. லாவா**
**4. மவுனாலோ 5. எரிமலை ஆய்வியல்**

**III. பொருந்தாததை வட்டமிடுக.**

1. மேலோடு, **மாக்மா**, புவிக்கரு, கவசம்
2. நில நடுக்க மையம், நில நடுக்க மேல் மையப்புள்ளி, எரிமலைவாய், **சிஸ்மிக் அலைகள்**
3. உத்தரகாசி, சாமோலி, கெய்னா, **கரக்கட்டாவோ**
4. லாவா, எரிமலைவாய், **சிலிக்கா**, எரிமலைபள்ளம்
5. ஸ்ட்ராம்போலி, ஹெலென், ஹவாய், **பூயூஜியாமா**

**IV. பொருத்துக** **விடைகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | **நில நடுக்கம்** | **ஜப்பானிய சொல்** | திடீர் அதிர்வு |
| 2 | சிமா | ஆப்பிரிக்கா | **சிலிகா மற்றும் மக்னீசியம்** |
| 3 | பசிபிக் நெருப்பு வளையம் | திடீர் அதிர்வு | **உலக எரிமலைகள்** |
| 4 | சுனாமி | சிலிகா மற்றும் மக்னீசியம் | **ஜப்பானிய சொல்** |
| 5 | கென்யா மலை | உலக எரிமலைகள் | **ஆப்பிரிக்கா** |

**V. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தை கருத்தில் கொண்டு சரியானதை ( ) செய்யவும்**

I. கூற்று: பூமியின் உருவத்தை ஒரு ஆப்பிளோடு கூட ஒப்பிடலாம்

காரணம்: புவியின் உட்பகுதி மேலோடு மெல்லிய புறத்தோல், புவிக்கரு ஆகியவற்றைக்கொண்டது.

**அ) கூற்றும் காரணமும் சரி கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது**

ஆ) கூற்றும் காரணமும் சரி ஆனால் கூற்றைக்காரணம் சரியாகவிளக்கவில்லை

இ) கூற்று சரி காரணம் தவறு

ஈ) கூற்றும் காரணமும் தவறானவை

2. கூற்று: உலகின் மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் பசிபிக்கடலில் உள்ளது.

காரணம்: பசிபிக்கடலின் மேற்கு மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதியை பசிபிக் நெருப்பு வளையம் என அழைக்கிறோம்.

**அ) கூற்றும் காரணமும் சரி கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது**

ஆ) கூற்றும் காரணமும் சரி ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை

இ) கூற்று தவறு காரணம் சரி

ஈ) கூற்றும் காரணமும் தவறானவை

**VI. ஒரு வரியில் விடையளிக்கவும்**

**1. புவியின் மேலோட்டின் பெயரை எழுதுக.**

- 1. கண்ட மேலோடு - சியால் 2. கடலடி மேலோடு - சிமா

**2. சியால் என்றால் என்ன?**

- கண்ட மேலோடு சிலிக்கா மற்றும் அலுமனியம் தாதுக்களால் ஆனது.
- இதனையே சியால் என்று இணைத்து அழைக்கின்றோம்.

**3. புவிப் பாறைக்கோளத் தட்டின் நகர்வின் பெயர் என்ன?**

- புவிப் பாறைக்கோளத் தட்டின் நகர்வின் பெயர் கண்டத்தட்டு நகர்வு ஆகும்.

**4. செயலிழந்த எரிமலைக்கு உதாரணம் கொடு.**

- மியான்மரின் போப்பா, ஆப்பிரிக்காவின் கிளிமாஞ்சரோ மற்றும் கென்யா எரிமலைகள்.

**VII. கீழ்கண்டவற்றிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்**

**1. மெல்லிய புறத்தோல் (அ) அடுக்கு என்றால் என்ன?**

- புவி மேலோடு மற்ற அடுக்குகளைக் காட்டிலும் தடிமண் குறைவாக உள்ளதால் (ஆப்பிலைப் போல்) மெல்லிய புறத்தோல் (அ) அடுக்கு என அழைக்கப்படுகிறது.

**2. புவிக்கரு பற்றி சுருக்கமாக எழுதவும்.**

- புவியின் மையப்பகுதியை புவிக்கரு என குறிப்பிடுகின்றனர்.
- புவிக்கரு இரண்டு அடுக்குகளைக் கொண்டதாக உள்ளது.
- அவை 1. வெளிப்புற புவிக்கரு 2. உட்புற புவிக்கரு

**3. நில நடுக்கம் வரையறு.**

- புவியின் மேலோட்டின், ஒரு பகுதியில் ஏற்படும் எதிர்பாராத நகர்வானது, நிலத்தை அதிரவைக்கும் அசைவையும், நடுக்கத்தையும், ஏற்படுத்துவதே நிலநடுக்கம் என்கிறோம்.

**4. சீஸ்மோகிராஃப் என்றால் என்ன?**

- புவி அதிர்வு அலைகளை பதிவு செய்யும் கருவியை நில அதிர்வு மானி (Seismograph) என குறிப்பிடுகின்றனர்.
- இதன் ஆற்றல் செறிவின் அளவினை ரிக்டர் என்பவர் கண்டுபிடித்த அளவையைக் கொண்டு கணக்கிடுக்கின்றனர்.

**5. எரிமலை என்றால் என்ன?**

- புவியின் மேற்பரப்பில் உள்ள பிளவு அல்லது துளை வழியே வெப்பம் மிகுந்த மாக்மா என்னும் பாறைக்குழம்பு வெளியேறுவதையே எரிமலை என்கிறோம்.

**6. உருவத்தின் அடிப்படையில் மூன்று எரிமலைகளின் பெயர்களை எழுதுக.**

- கேடய எரிமலை (Shield Volcano)
- தழல் கூம்பு எரிமலை (Cinder cone Volcano)
- பல்சிட்டக் கூம்பு எரிமலை (Composite core Volcano)

**VIII. காரணம் கூறு**

**1. புவியின் உட்புறத்திலிருந்து ஒருவருமே மாதிரி எடுக்கவில்லை.**

- அதிக வெப்பத்தின் காரணமாக புவியின் உட்புறத்திலிருந்து ஒருவருமே மாதிரி எடுக்கவில்லை.

**2. கண்டங்களின் மேலோடு கடலின் மேலோட்டை விட அடர்த்தி குறைவு**

- ஏனெனில் கடல் மேலோடுகள் இலகுவான மற்றும் அடர்ந்த பாறைகளின் கலவையாகும்.

IX. வேறுபடுத்துக

1. சியால் மற்றும் சிமா

| | சியால் | சிமா |
|---|---|---|
| 1 | கண்டங்களின் மேற்பகுதி | மேலோட்டின் கீழ்ப்பகுதி |
| 2 | சிலிக்கா மற்றும் அலுமினியம் தாதுக்களால் ஆனது. | சிலிக்கா மற்றும் மக்னீசியம் தாதுக்களால் ஆனது |
| 3 | இதன் சராசரி அடர்த்தி 2.7 கி/செ.மீ3. | இதன் சராசரி அடர்த்தி 3.0 கி/செ.மீ3. |

2. கேடய எரிமலை மற்றும் பல்சிட்ட எரிமலை

| | கேடய எரிமலை | பல்சிட்ட எரிமலை |
|---|---|---|
| 1 | சிலிகாவின் அளவு குறைந்து மிக மெதுவாக எரிமலை குழம்பு வெளியேறும் போது உருவாகின்றது. | லாவா, பல்சிட்டம், எரிமலை சாம்பல் ஆகியவை மாறி மாறி அடுக்குகளாக படியும் போது உருவெடுக்கின்றன. |
| 2 | ஹவாய் தீவிலுள்ள எரிமலைக் குன்றுகள் | செயின்ட் ஹெலன் எரிமலை |

3. செயல் எரிமலை மற்றும் செயலற்ற எரிமலை

| | செயல் எரிமலை | செயலற்ற எரிமலை |
|---|---|---|
| 1 | அடிக்கடி வெடித்து வெளியேற்றும் எரிமலைகள் | வெடிப்பு ஆற்றல் முழுவதையும் இழந்து, வெடிப்பதை நிறுத்திவிட்ட எரிமலை |
| 2 | எ.காட்டு : செயிண்ட் ஹெலன், பினாடுபோ, மவுனாலோ | எ.காட்டு : கிளிமாஞ்சரோ மற்றும் கென்யா எரிமலைகள் |

X. பத்தியளவில் விடையளி

**1. நிலநடுக்கத்தின் விளைவுகள் பற்றி எழுதுக.**

- நிலநடுக்கங்கள், மலைப்பிரதேசங்களில் நிலச்சரிவுகளை ஏற்படுத்துகின்றன.
- தீப்பற்றுதல் மற்றோர் முக்கிய ஆபத்தாகும்.
- நிலத்தடிநீர் அமைப்பும் நிலநடுக்கத்தால் பெரிதும் பாதிப்படைகிறது.
- கடலுக்கு அடியில் அல்லது கடற்கரை ஓரங்களில் ஏற்படும் நிலநடுக்கமானது கடல்நீரில் சுனாமி அலைகளை ஏற்படுத்தி பெருத்த சேதங்களை ஏற்படுத்துகின்றன.

**2. எரிமலை வெடிப்பின் அடிப்படையில் அதன் வகைகளை விளக்குக.**

**1. செயல்படும் எரிமலைகள்**

- அடிக்கடி வெடித்து வெளியேற்றும் எரிமலைகள்
- எ.காட்டு : செயிண்ட் ஹெலன், பினாடுபோ, மவுனாலோ

**2. செயல்படாத எரிமலை அல்லது உறங்கும் எரிமலைகள்**

- பல வருடங்களாக எரிமலைக்குழம்பை வெளியேற்றுவதற்கான எந்த ஒரு அறிகுறியும் வெளிப்படுத்தாமல், எப்போது வேண்டுமானாலும் செயல்படக்கூடிய எரிமலைகள்.
- எ.காட்டு : வெசுவியஸ், பியூஜியாமா, சிரகோட்டா.

**3. செயலிழந்த எரிமலைகள்**

- வெடிப்பு ஆற்றல் முழுவதையும் இழந்து, வெடிப்பதை நிறுத்திவிட்ட எரிமலைகள்.
- எ.காட்டு : கிளிமாஞ்சரோ மற்றும் கென்யா எரிமலைகள்

**3. முக்கியமான எரிமலை மண்டலங்களை எழுதி ஏதேனும் ஒன்று பற்றி விவரி**

**முக்கியமான எரிமலை மண்டலங்கள்**

1. பசிபிக்வளையப்பகுதி 2. மத்திய கண்டப்பகுதி 3. மத்திய அட்லாண்டிக்பகுதி

**1. பசிபிக்வளையப் பகுதி**

- இந்த எரிமலைப் பகுதியானது குவிய கடல்தட்டின் எல்லை பகுதியில் அமையப்பெற்றுள்ளது.

- பசிபிக்பெருங்கடலின் கிழக்கு மற்றும் மேற்கு கடலோரப்பகுதிகளில் அமைந்துள்ளது.
- மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் இப்பகுதியில் அமைந்திருப்பதால் இதனை பசிபிக்நெருப்பு வளையம் என்று அழைக்கின்றனர்.

**XI. சிந்தனை வினா(Hots)**

**1. பூமியின் உட்கரு மிகவும் வெப்பமானது ஏன்?**

- பூமி தோன்றிய ஆரம்பகாலத்தில் ஒரு நெருப்பு கோளத்தைப் போல் அதிக வெப்பநிலையிருந்தததது.
- நாளடைவில் மேலோடு மட்டும் குளிர்வடைந்தததது.
- மற்ற அடுக்குகளான கவசம் மற்றும் உட்கரு அதிக வெப்பத்துடன் காணப்படுகின்றன.

**2. எரிமலைகள் அழிவானதா அல்லது ஆக்கப்பூர்வமானதா?**

- எரிமலைகள் அழிவானது.

**3. எரிமலை எவ்வாறு ஒரு தீவை உருவாக்குகிறது?**

- கடலின் அடிப்பகுதியில் எரிமலைவெடிப்பு, குளிர்வித்தல் தொடர்ச்சியாக மாறி மாறி நடைபெறும் போது எரிமலை தீவுகள் உருவாகின்றன.

## அலகு - II நிலத்தோற்றங்கள்

**I. சரியான விடையை தேர்ந்தெடுக்க**

1. மலைஅடிவாரத்தில் ஆறுகளால் படியவைக்கப்படும் வண்டல் படிவுகள் ---------------------- ஆகும்.
அ. வீழ்ச்சி குளம் **ஆ. வண்டல் விசிறி** இ. வெள்ளச் சமவெளி ஈ டெல்டா

2. குற்றால நீர்வீழ்ச்சி --------ஆற்றுக்கு குறுக்காக அமைந்துள்ளது.
அ. காவேரி ஆ. பெண்ணாறு **இ. சிற்றாறு** ஈ வைகை

3. பனியாற்றுபடிவுகளால் தோற்றுவிக்கப்படும் நிலத்தோற்றம் ------------------ ஆகும்.
அ. சர்க் ஆ. அரெட்டுகள் **இ. மொரைன்கள்** ஈ டார்ன் ஏரி

4. மிகப்பெரிய காற்றடி வண்டல் படிவுகள் காணப்படும் இடம்.
அ. அமெரிக்கா ஆ. இந்தியா **இ. சீனா** ஈ. பிரேசில்

5. பின் குறிப்பிட்டவையில் கடல் அலை அரிப்புடன் தொடர்பில்லாத ஒன்று -----------
அ.கடல் ஓங்கல் ஆ.கடல் வளைவுகள் இ.கடல் தூண் **ஈ.கடற்கரை**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. பாறைகள் உடைவதையும் மற்றும் நொறுங்குவதையும் ----------------------- என்கிறோம்.
2. ஒரு ஏரி அல்லது ஒரு கடலில் ஆறு சேரும் இடம் ------------------ எனப்படுகிறது.
3. காற்று அரிப்புத் தனிக்குன்றுகள் தென் ஆப்பிரிக்காவில் --------------------- பாலைவனத்தில் காணப்படுகிறது.
4. ஜெர்மனியில் காணப்படும் சர்க்--------------------------என்று அழைக்கப்படுகிறது.
5. உலகின் மிக நீண்டகடற்கரை-------------------- ஆகும்.

**விடைகள் : 1. பாறைச்சிதைவு 2. ஆற்று முகத்துவாரம் 3. கல்ஹாரி 4. கார் சர்க் 5. மியாமி கடற்கரை**

**III. பொருத்துக:**

| | | |
|---|---|---|
| 1 | பாறைஉடைதல் மற்றும் நொறுங்குதல் | பனியாறுகள் |
| 2 | கைவிடப்பட்டமியாண்டர் வளைவுகள் | பிறைவடிவ மணற்குன்றுகள் |
| 3 | நகரும் ஒரு பெரும் பனிக்குவியல் | காயல் |
| 4 | பிறைவடிவ மணல் மேடுகள் | பாறைச் சிதைவுகள் |

| 5 | வேம்பநாடு ஏரி | குதிரைக் குளம்பு ஏரி |
|---|---|---|

**விடைகள் : 1. பாறைச் சிதைவுகள் 2. குதிரைக் குளம்பு ஏரி 3. பனியாறுகள் 4. பிறைவடிவ மணற்குன்றுகள் 5. காயல்**

**IV. பின்வரும் தகவல்களை கருத்தில் கொண்டு சரியான விடையை ( ) குறியிடுக**

1. **கூற்று** (அ) முகத்துவாரப்பகுதியில் ஆறுகளால் டெல்டாக்கள் உருவாகின்றன.
**காரணம்** (க) கடல் பகுதியை ஆறு அடையும் போது ஆற்றின் வேகம் குறையும்.

**(அ) மற்றும் (க) இரண்டும் சரி** (ஆ) சரி மற்றும் (க) தவறு
(இ) தவறு மற்றும் (க) சரி (ஈ) மற்றும் (க) இரண்டும் தவறு

2. **கூற்று** (அ) கடல் வளைவுகள் இறுதில் கடல் தூண்களாகின்றன.
**காரணம்** (க) கடல் தூண்கள் அலைகளின் படிவுகளால் ஏற்படுகின்றன.

(அ) மற்றும் (க) இரண்டும் சரி **(ஆ) சரி மற்றும் (க) தவறு**
(இ) தவறு மற்றும் (க); சரி (ஈ) மற்றும் (க) இரண்டும் தவறு

**V. பின்வருவனவற்றிற்கு விடையளிக்க.**

**1. அரித்தல் வரையறு.**

- நீர், காற்று, பனி மற்றும் கடல் அலைகள் என பல்வகைப்பட்ட காரணிகளால் புவியின் மேற்பரப்பு அடித்துச் செல்லப்படுவதை அரித்தல் என்கிறோம்

**2. வீழ்ச்சி குளம் என்றால் என்ன?**

- நீர்வீழ்ச்சியின் கீழ் பகுதியில் குழிவுறுதல் காரணமாக ஏற்படும் பெரும் பள்ளம் வீழ்ச்சி குளம் அல்லது உட்பாய்த்தேக்கம் எனப்படுகின்றது.

**3. குதிரைக்குளம்பு ஏரி எவ்வாறு தோன்றுகிறது?**

- அரித்தல் மற்றும் படிதல் ஏற்படுவதால், ஆற்று வளைவின் கழுத்துப்பகுதிகள் குறைந்து நாளடைவில், ஆற்று வளைவு ஆற்றிலிருந்து துண்டிக்கப்பட்டு ஒரு ஏரியாக உருவெடுக்கின்றது.
- இதுவே குதிரைக்குளம்பு ஏரி (Oxbow lake) எனப்படுகிறது.

**4. பனியாற்று அரித்தலினால் ஏற்படும் முதன்மை நிலத்தோற்றங்களை கூறிப்பிடவும்.**

- **சர்க்குகள்** - பனியாறுகளால் பாறைகளின் மீது ஏற்படுத்தும் கைநாற்காலி போன்ற பள்ளத்தாக்கு ஆகும்.
- **அரெட்டுகள்** - இரண்டு சாக்குகள் ஒன்றை நொக்கி ஒன்று அரிக்கப்படும் போது, முகடுகளாக மாற்றம் அடைகின்றன. இம்முகடுகள் அரெட்டுகள் என்ற கத்திமுனைக் குன்றுகளாக உருவெடுக்கின்றன.

**5. காளான் பாறைகள் பற்றி குறிப்பு எழுதுக.**

- பாறையின் மேற்பகுதியை விட கீழ்ப்பகுதியை வேகமாக காற்று அரிக்கின்ற காரணத்தினால் அப்பாறைகளின் மேற்பகுதி அகன்றும் மற்றும் அடிப்பகுதி குறுகலாகவும் காளான் வடிவத்தில் காணப்படுகிறது.

**6. காயல்கள் என்றால் என்ன? ஒரு உதாரணம் தருக.**

- கடற்கரையிருந்து பகுதியாகவோ அல்லது முற்றிலுமாக பிரிக்கப்பட்ட ஆழம் குறைவான நீர் தேக்கம் காயல்கள் அல்லது உப்பங்கழிகள் (Lagoon) எனப்படும்.
- எ.கா. ஒடிசாவிலுள்ள சிலிக்கா ஏரி, தமிழ்நாட்டிலுள்ள பழவேற்காடு ஏரி மற்றும் கேரளாவிலுள்ள வேம்பநாடு ஏரி.

VI. கீழ் குறிப்பிட்டவைகளை வேறுபடுத்துக

1. கிளையாறு மற்றும் துணையாறு.

| | கிளையாறு | துணையாறு |
|---|---|---|
| 1. | ஒரு முதன்மை ஆற்றுடன் இணையும் அல்லது ஆற்றினுள் பாயும் ஓர் நீரோடை அல்லது ஓர் ஆறு. | ஒரு முதன்மை ஆற்றிலிருந்து பிரிந்து மற்றும் விலகிச் செல்லும் ஓர் ஆறு. |

2. 'V'வடிவ பள்ளத்தாக்கு மற்றும் 'U'வடிவ பள்ளத்தாக்கு.

| | 'V'வடிவ பள்ளத்தாக்கு | 'U'வடிவ பள்ளத்தாக்கு |
|---|---|---|
| 1 | செங்குத்து மலைச்சரிவுகளுக்கு இடையே உள்ள பள்ளத்தாக்கை வேகமாக ஓடும் நீரானது செங்குத்தாக அரித்து ஆழமாக்குவதால் உருவாகிறது. | பனியாற்றின் பக்கவாட்டு மற்றும் செங்குத்து அரிப்பினால் ஏற்படும் ஆழப்படுத்துதல் மற்றும் அகலப்படுததுதல் மூலம் உருவாகின்றன. |
| 2 | குறுகிய படுகை உடையது. | அகன்ற படுகை உடையது. |

3. கண்டப்பனியாறு மற்றும் மலைப்பனியாறு

| | கண்டப்பனியாறு | மலைப்பனியாறு |
|---|---|---|
| 1 | கண்டப்பகுதியில் பெரும் பரப்பில் பரவிக் காணப்படும் அடர்ந்த பனிப்படலம் கண்டப்பனியாறு எனப்படுகின்றது. | மலையிலிருந்து பள்ளத்தாக்கை நோக்கி நகரும் பனியாறு மலை அல்லது பள்ளத்தாக்கு பனியாறு எனப்படுகின்றது. |
| 2 | எ.கா. அண்டார்டிகா மற்றும் கிரீன்லாந்து | எ.கா. இமயமலை மற்றும் ஆல்ப்ஸ் |

VII. காரணம் தருக

1. மியான்டர் ஆற்றின் வளைவுகளின் முடிவுப்பகுதிகள் நெருக்கமாக வருகின்றன.

- ஆற்று வளைவுகள் (Meanders) இருபக்கங்களிலும் தொடர்ந்து அரித்தல் மற்றும் படிதல் ஏற்படுவதால், ஆற்று வளைவின் கழுத்துப்பகுதிகள் குறைந்து வருகின்றன.

2. வெள்ளச் சமவெளிகள் மிகவும் வளமிக்கதாக உள்ளன.

- வெள்ளப்பெருக்கானது மென்மையான மண்மற்றும் இதர பொருட்களையும் அடுக்குகளாக படிய வைக்கின்றன.
- இதனால் வளமான சமதள வெள்ளச்சமவெளி உருவாகின்றது.

3. கடல் குகைகள் கடல் தூண்களாக மாறுகின்றன.

- கடல் குகைகளின் உட்குழிவு பெரிதாகும் போது குகையின் மேற்கூரைமட்டும் எஞ்சி நின்று கடல் வளைவுகளை தோற்றுவிக்கின்றது.
- மேலும் கடல் அலைகள் மேற்கூரையைஅரிப்பதால் பக்கச்சுவர்கள் மட்டும் எஞ்சி நிற்கின்றன. இவ்வாறு கடல் குகைகள் கடல் தூண்களாக மாறுகின்றன.

VIII. பத்தி அளவில் விடை அளிக்க.

1. ஆற்றின் அரிப்பால் தோன்றும் வேறுபட்ட நிலத்தோற்றங்களை விவரிக்க.

'V'வடிவ பள்ளத்தாக்கு

- செங்குத்து மலைச்சரிவுகளுக்கு இடையே உள்ள பள்ளத்தாக்கை வேகமாக ஓடும் நீரானது செங்குத்தாக அரித்து ஆழமாக்குவதால் உருவாகிறது. இந்த பள்ளத்தாக்கு குறுகிய படுகை உடையதாக 'V' வடிவில் காணப்படும்.

நீர்வீழ்ச்சி

- மென்பாறைகள் அரிக்கப்படுவதால் நீர்வீழ்ச்சி தோன்றுகின்றது. (உதாரணம்) தமிழ்நாட்டில் சிற்றாற்றின் குறுக்கே உள்ள குற்றால நீர்வீழ்ச்சி.

வீழ்ச்சி குளம் அல்லது உட்பாய்த்தேக்கம்

- நீர்வீழ்ச்சியின் கீழ் பகுதியில் குழிவுறுதல் காரணமாக ஏற்படும் பெரும் பள்ளம் வீழ்ச்சி குளம் அல்லது உட்பாய்த்தேக்கம் எனப்படுகின்றது.

**2. காற்றின் செயல்களால் ஏற்படும் நிலத்தோற்றங்களை விளக்குக.**

1. **காளான் பாறைகள்** : பாறையின் மேற்பகுதியைவிட கீழ்ப்பகுதியைவேகமாக காற்று அரிக்கின்ற காரணத்தினால் அப்பாறைகளின் மேற்பகுதி அகன்றும் மற்றும் அடிப்பகுதி குறுகலாகவும் காணப்படுகிறது.
2. **தனிக்குன்றுகள்** : ஒரு தனித்து விடப்பட்ட எஞ்சிய குன்று வட்டமான தலைப்பகுதியுடன் நிற்கும் ஒரு தூண் போன்று காட்சி அளிப்பது காற்று அரிப்புத் தனிக்குன்றுகள் (Inselbergs) என்று அழைக்கப்படுகிறது.
3. **மணல் குன்றுகள்** : காற்று வீசும் போது மணலை ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு கடத்துகின்றது. காற்றின் வீசுவது நிற்கும் போது மணலானது உயரம் குறைவான குன்றுகள் போன்று படியவைக்கின்றது. இப்படிவுகள் மணல் குன்றுகள் என அழைக்கப்படுகிறது.
4. **பிறைவடிவ மணல் குன்றுகள்** : பிறைச்சந்திர தோற்றமுடன் கூடிய மணல் மேடுகள் பிறைவடிவ மணல் குன்றுகள் எனப்படுகின்றன.
5. **காற்றடி வண்டல் படிவுகள்** : மணல் துகள்கள் மிக லேசாகவும் மற்றும் எடை குறைவாகவும் இருக்கும் போது காற்று நீண்டதொலைவிற்கு கடத்தி செல்கின்றது. இவ்வாறு கடத்தப்பட்ட மணல் ஒரு பெரும் பரப்பில் படிவதை காற்றடி வண்டல் படிவுகள் (Loess) எனப்படுகிறது.

**3. அரெட்டுகள் எவ்வாறு தோன்றுகின்றன?**

- அடுத்தடுத்த இரண்டு சாக்குகள் ஒன்றை நோக்கி ஒன்று அரிக்கப்படும் போது, இதற்கு முன்னர் அமைந்த வட்டமான நிலத்தோற்றம் குறுகிய மற்றும் மலைச்சரிவான பக்கங்களுடன் கூடிய முகடுகளாக மாற்றம் அடைகின்றன.
- இம்முகடுகள் அரெட்டுகள் என்ற கத்திமுனைக் குன்றுகளாக உருவெடுக்கின்றன.

**IX. 1. கீழே கொடுக்கப்பட்டுள்ள நிலத்தோற்றங்களை தொடர்புடைய கட்டங்களில்நிரப்பவும்.**

| வ. எண் | இயற்கை செயலிகள் | நிலத்தோற்றங்கள் | |
|---|---|---|---|
| | | அரிப்பு | படிதல் |
| 1 | ஆறு | 'V' வடிவ பள்ளத்தாக்கு | வண்டல் விசிறி |
| 2 | பனியாறு | அரெட் | மொரைன் |
| 3 | காற்று | தனிக்குன்றுகள் | பர்கான் |
| 4 | கடல் அலை | ஓங்கல் | காயல் |

(பர்கான், 'V' வடிவ பள்ளத்தாக்கு, ஓங்கல், அரெட், தனிக்குன்றுகள், மொரைன், வண்டல் விசிறி மற்றும் காயல்)

## அலகு - III மக்கள் தொகையும், குடியிருப்புகளும்

**I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்**

1. காக்கசாய்டு இனத்தை________ என்றும் அழைக்கலாம்

**அ). ஐரோப்பியர்கள்** ஆ). நீக்ரோய்டுகள் இ). மங்கோலியர்கள் ஈ) ஆஸ்திரேலியர்கள்

2. ____________ இனம் ஆசிய அமெரிக்க இனமாகும்

அ) காக்கசாய்டு ஆ) நீக்ரோக்கள் **இ) மங்கோலியர்கள்** ஈ) ஆஸ்திரேலியர்கள்

3. இந்தியாவின் ஆட்சி மொழி ____________ ஆகும்.

அ) மராத்தி ஆ) தமிழ் இ) ஆங்கிலம் **ஈ) இந்தி**

4. கிராமப்புறக் குடியிருப்புகள் ________ அருகில் அமைந்துள்ளது

**அ) நீர்நிலைகள்** ஆ) மலைப் பகுதிகள்

இ) கடலோரப் பகுதிகள் ஈ) பாலைவனப் பகுதிகள்

5. அளவின் அடிப்படையில் கீழ்க்காணும் நகர்ப்புற குடியிருப்புகளை வரிசைப்படுத்துக.

1) நகரம் 2) மீப்பெருநகரம் 3) தலைநகரம் 4) இணைந்தநகரம்

அ). 4, 1, 3, 2 **ஆ) 1, 3, 4, 2** இ). 2, 1, 3, 4 ஈ). 3, 1, 2, 4

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. தென் ஆப்பிரிக்காவின் ________ பாலைவனத்தில் முக்கியமாக புஷ்மென்கள் காணப்படுகிறது.

2. மொழியின் பங்கு என்பது ___________ குடும்ப பகிர்வு அம்சங்களின் தோற்றம் மற்றும் தொகுப்பாகும்.

3. ____________ குடியிருப்பில் மக்கள் பெரும்பாலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை செயல்களில் ஈடுபட்டிருப்பார்கள்

4. ____________ நகரங்கள் பொதுவாக கிராம நகர்ப்புற எல்லைக்கு வெளியே அமைந்திருக்கும்

5. ____________ குடியிருப்பு வழிபாட்டுத் தலங்களைச் சுற்றி அமைந்திருக்கும்.

**விடைகள் : 1. கலகாரி 2. மொழி 3. நகர்ப்புற 4. செயற்கைக்கோள் 5. யாத்திரை**

**III. A. பொருத்துக** **விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | காக்கசாய்டு | ஆசிய அமெரிக்கர்கள் | **ஐரோப்பியர்கள்** |
| 2 | நீக்ராய்டு | ஆஸ்திரேலியர்கள் | **ஆப்பிரிக்கர்கள்** |
| 3 | மங்கலாய்டு | ஐரோப்பியர்கள் | **ஆசிய அமெரிக்கர்கள்** |
| 4 | ஆஸ்ட்ரோலாய்டு | ஆப்பிரிக்கர்கள் | **ஆஸ்திரேலியர்கள்** |

**B. பொருத்துக** **விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | சட்லஜ் கங்கைச் சமவெளி | சிதறிய குடியிருப்பு | **செவ்வகவடிவ அமைப்பு** |
| 2 | நீலகிரி | நட்சத்திர வடிவக்குடியிருப்பு | **சிதறிய குடியிருப்பு** |
| 3 | தென் இந்தியா | செவ்வகவடிவ அமைப்பு | **வட்டக்குடியிருப்பு** |
| 4 | கடற்கரை | குழுமிய குடியிருப்பு | **குழுமிய குடியிருப்பு** |
| 5 | ஹரியானா | வட்டக்குடியிருப்பு | **நட்சத்திர வடிவக்குடியிருப்பு** |

**IV. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தை கருத்தில் கொண்டு சரியானதை (√ ) செய்யவும்**

1. **கூற்று (A)** : உலகில் அநேக மொழிகள் பேசப்படுகின்றன

**காரணம் (R)** : மொழி வேற்றுமை உலகில் அதிக அளவில் காணப்படுகிறது

**(அ) கூற்றும் காரணமும் சரி கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது**

(ஆ) கூற்றும் காரணமும் சரி ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை

(இ) கூற்றும் தவறு காரணம் சரி

(ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

2. **கூற்று (A)** : பழனி - முருகன் கோவில். தமிழ்நாட்டில் யாத்திரைக் குடியிருப்பிற்கு ஒரு எடுத்துக்காட்டு

**காரணம் (R)** : இரும்பு எஃகு தொழிற்சாலை அமைந்துள்ளது.

(அ) காரணம் சரி காரணத்தை கூற்று சரியாக விளக்குகிறது

**(ஆ) காரணம் சரி காரணத்தை கூற்று சரியாக விளக்கவில்லை**

(இ) கூற்றும் தவறு காரணம் சரி

(ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**V. பொருந்தாததை வட்டமிடுக**

1. மீன்பிடித்தல், மரம் அறுத்தல், விவசாயம், **வங்கி அலுவல்**
2. இமயமலை, ஆல்பஸ், ராக்கி, **கங்கை**
3. சென்னை, மதுரை, திருநெல்வேலி, **காஞ்சிபுரம்**

**VI. கீழ்க்கண்டவற்றிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்**

**1. இனங்களின் வகைகள் யாவை?**

- ❖ காக்கசாய்டு (ஐரோப்பியர்கள்)
- ❖ நீக்ராய்டு (ஆப்பிரிக்கர்கள்)
- ❖ மங்கோலாய்டு (ஆசியர்கள்)
- ❖ ஆஸ்ட்ரலாய்டு (ஆஸ்திரேலியர்கள்)

**2. மொழி என்றால் என்ன?**

- ❖ சமுதாய அமைப்பிற்கு மொழி கலாச்சாரத்தை பரப்பும் ஒரு பிரதான கருவியாகும்.
- ❖ ஒருவர் மற்றொருவருடன் தொடர்பு கொள்வதற்கு எழுத்து வடிவிலோ அல்லது ஒலி வடிவிலோ மொழி பயன்படுத்தப்படுகிறது.

**3. மதத்தின் வகைகளை கூறுக**

**(அ) உலகளாவிய மதங்கள்**

- ❖ கிறிஸ்துவம், இஸ்லாம் மற்றும் புத்தமதம்

**(ஆ) மனித இனப்பிரிவு மதங்கள்**

- ❖ ஜூடோயிசம், இந்துமதம் மற்றும் ஜப்பானிய ஷிண்டோயிசம்

**(இ) நாடோடிகள் (அல்லது) பாரம்பரிய மதங்கள்**

- ❖ அனிமிஸம், ஷாமானிஸம் மற்றும் ஷாமன்

**4. குடியிருப்பு வரையறு**

- ❖ குடியிருப்பு என்பது மனித வாழ்விடமாகும்.
- ❖ அங்கு விவசாயம், வாணிபம் மற்றும் பொழுதுபோக்கு ஆகிய செயல்களின் மூலம் ஒருவருக்கொருவர் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்கின்றனர்.

**5. நகர்ப்புற குடியிருப்புகள் எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன?**

- ❖ மக்கள் தொகையின் அளவு
- ❖ தொழில் அமைப்பு
- ❖ நிர்வாகம்

**6. சிறப்புப் பொருளாதார நகரம் பற்றி சிறு குறிப்பு வரைக.**

- ❖ நகர்ப்புறப்பகுதியில் உள்கட்டமைப்பு வசதி, வீட்டுமனை விற்பனை, தொலைத்தொடர்பு, எளிதாக கிடைக்கக்கூடிய சந்தை உள்ள இடங்களே சிறப்பு பொருளாதார நகரமாகும்.

**VII. காரணம் கூறு**

**1. சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே இந்தியாவில் இனக்கலப்பு இருந்தது**

- ❖ பல்வேறு நாடுகளின் படையெடுப்புகள், குடியேறிறத்தின் விளைவாக சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே இந்தியாவில் இனக்கலப்பு இருந்தது.

**2. மும்பை ஒரு மிகப்பெரிய நகரம்**

- ❖ ஏறத்தாழ 14 மில்லியன் மக்கள்தொகை கொண்ட நகரமாக விளங்குவதால் மும்பை ஒரு மிகப்பெரிய நகரம் ஆகும்.

3. **இமயமலையில் சிதறிய குடியிருப்பு உள்ளது**

❖ உயரமான மலைகளும், அடர்ந்த காடுகளும் காணப்படுவதால் இமயமலையில் சிதறிய குடியிருப்பு உள்ளது.

VIII. **வேறுபடுத்துக**

1. **நிலத்தோற்றப் புவியியல் மற்றும் மனிதப் புவியியல்**

| | நிலத்தோற்றப் புவியியல் | மனிதப் புவியியல் |
|---|---|---|
| 1. | புவியின் பல்வேறு நிலத்தோற்றங்களைப் பற்றிய அறிவியல் பிரிவு. | மனிதன் மற்றும் அவனின் சுற்றுப்புறத்தை இயற்கைச் சூழலோடு படிப்பதே ஆகும். |

2. **மொழி மற்றும் மதம்**

| | மொழி | மதம் |
|---|---|---|
| 1 | சமுதாய அமைப்பிற்கு மொழி கலாச்சாரத்தைபரப்பும் ஒரு பிரதான கருவியாகும். | ஒரு குறிப்பிட்டநம்பிக்கையும், வழிபாட்டு முறையும் கொண்டதாகும். |
| 2 | அரசியல், பொருளாதார சமூக மற்றும் மத செயல்பாடுகளின் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள மொழி வழி வகுக்கிறது. | மதம் ஒரு குழுவின் அடையாளமாகவும், கலாச்சார புத்துணர்வுப் புள்ளியின் அடையாளமாகவும் திகழ்கிறது. |

3. **நீக்ரோக்கள் மற்றும் மங்கோலியர்கள்**

| | **நீக்ரோக்கள்** | **மங்கோலியர்கள்** |
|---|---|---|
| 1 | கருமைநிறக்கண்கள், கருப்புநிறத்தோல், கருமையான, முடி, அகலமான மூக்கு, நீளமான தலை, மற்றும் தடித்த உதடுகளைக் கொண்டவர்களாவார்கள்.. | வெளிர் மஞ்சள் முதல் பழுப்புநிறத்தோல், நீளமானமுடி, தட்டையான முகஅமைப்பு, பெரிய தலை மற்றும் மத்தியமான மூக்கு உடையவர்களாவார்கள். |
| 2 | இவர்கள் ஆப்பிரிக்காவில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள் | இவர்கள் ஆசியா மற்றும் ஆர்க்டிக் பிரதேசத்தில் காணப்படுகிறார்கள். |

4. **பெருநகரம் மற்றும் நகரம்**

| | **பெருநகரம்** | **நகரம்** |
|---|---|---|
| | ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மேல் அதிகமானோர் உள்ள இடங்களையே மாநகரம் என அழைக்கிறோம்.. | நகர்ப்புறக் குடியிருப்பின் மக்கள் தொகையில், குறைந்தபட்சமக்கள் தொகையான 5000க்கும் மேலான மக்கள் இருக்கும் இடத்தையே நகரம் என்கிறோம். |

5. **நகர்ப்புற குடியிருப்பு, மற்றும் கிராமப்புறக் குடியிருப்பு**

| | **நகர்ப்புற குடியிருப்பு** | **கிராமப்புறக் குடியிருப்பு** |
|---|---|---|
| 1 | மக்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைத்தொழில்களில் ஈடுபடுகின்றனர். | முதன்மைத் தொழிலான வேளாண்மை, மரம் அறுத்தல், மீன்பிடித்தல் மற்றும் சுரங்கத்தொழிலில் ஈடுபடுகின்றனர். |
| 2 | மக்கள் தொகையின் அளவு மற்றும் அடர்த்தி, அதிகமாகவும் காணப்படுகிறது. | மக்கள் தொகையின் அளவு மற்றும் அடர்த்தி குறைவாக காணப்படுகிறது. |

IX. **பத்தியளவில்விடையளி**

1. **நான்கு முக்கிய இனங்களைப் பற்றி விவரிக்கவும்**

**காக்கசாய்டு**

- ❖ இவ்வின மக்கள் வெள்ளைநிறத்தோலும், அடர்பழுப்பு நிறக்கண்களும், அலை போன்ற முடியும், நீளமான மூக்கும் உடையவர்களாவர்.
- ❖ இவர்கள் ஐரோப்பாவிலும், யூரேசியாவிலும் காணப்படுகிறார்கள்.

**நீக்ராய்டு**

- ❖ இவ்வின மக்கள் கருமைநிறக்கண்கள், கருப்பு நிறத்தோல், கருமையான, முடி, அகலமான மூக்கு, நீளமான தலை, மற்றும் தடித்த உதடுகளைக் கொண்டவர்களாவார்கள்.
- ❖ இவர்கள் ஆப்பிரிக்காவில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள்.

**மங்கோலாய்டு**

- ❖ இவர்கள் வெளிர் மஞ்சள் முதல் பழுப்பு நிறத்தோல், நீளமானமுடி, தட்டையான முகஅமைப்பு, பெரிய தலை மற்றும் மத்தியமான மூக்கு உடையவர்களாவார்கள்.
- ❖ இவர்கள் ஆசியா மற்றும் ஆர்க்டிக் பிரதேசத்தில் காணப்படுகிறார்கள்.

**ஆஸ்ட்ரலாய்டு**

- ❖ ஆஸ்திரேலியர்கள் அகலமான மூக்கு, சுருள்முடி, கருப்புநிறத்தோல் மற்றும் குறைவான உயரம் உடையவர்களாக குட்டையானவர்களாகக் காணப்படுகிறார்கள்.
- ❖ இவர்கள் ஆஸ்திரேலியா மற்றும் ஆசியாவில் வாழ்ந்து வருகிறார்கள்.

2. **மத வாழ்க்கையின் முக்கியக்கூறுகள் பற்றி எழுதுக**

- ❖ மதம் என்பது ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையும், வழிபாட்டு முறையும் கொண்டதாகும்.
- ❖ இது மனிதனை ஒரு மனித சமுதாயத்திற்குள் கொண்டு வரும்.
- ❖ மதம் ஒரு குழுவின் அடையாளமாகவும், கலாச்சார புத்துணர்வுப் புள்ளியின் அடையாளமாகவும் திகழ்கிறது.

3. **கிராமப்புறக் குடியிருப்பைக் கட்டுப்படுத்தும் காரணிகள் யாவை?**

- ❖ இயற்கையான நிலத்தோற்றம்
- ❖ உள்ளூர் தட்பவெப்பநிலை
- ❖ மண் வளம் மற்றும் நீர் வளங்கள்
- ❖ சமூக நிறுவனங்கள்
- ❖ பொருளாதார நிலை

4. **கிராமப்புறக் குடியிருப்பின் வகைகள் யாவை? ஏதாவது மூன்றினைப் பற்றி விரிவாக எழுதவும்**

**கிராமப்புறக் குடியிருப்பின் வகைகள்:**

- ❖ நேர்க்கோட்டு, செவ்வகமான, வட்டமான, நட்சத்திர வடிவமான கிராம குடியிருப்புகள்

**நேர்க்கோட்டு குடியிருப்பு**

- ❖ சாலைகள், இருப்புப்பாதைகள், ஆறு அல்லது கால்வாய், பள்ளத்தாக்கின் சரிவு ஆகியவற்றிற்கு அருகில் கட்டப்பட்டவீடுகளின் தொகுப்பு.
- ❖ எடுத்துக்காட்டு இமயமலை, ஆல்ப்ஸ் மற்றும் ராக்கி மலைத்தொடர்.

**செவ்வக வடிவக் குடியிருப்புகள்**

- ❖ பெரும்பாலும் செவ்வகவடிவில் நீளமானதாகவும் ஒன்றையொன்று நேர் கோணத்தில் சந்தித்துக்கொள்ளும்.(எ.கா) சட்லஜ்.

**நட்சத்திர வடிவக்குடியிருப்புகள்**

- ❖ சாலைகள் ஒன்று சேரும் இடங்களிலிருந்து, சாலைகளின் இருபக்கங்களிலும் எல்லா திசைகளிலும் பரவி நட்சத்திர வடிவில் காணப்படும்.
- ❖ எடுத்துக்காட்டு பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் உள்ள சிந்து, கங்கைசமவெளிகள்.

# குடிமையியல்

## அலகு - I சமத்துவம்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:**

1. பின்வருவனவற்றுள் எது சமத்துவத்தின் கீழ் வருவதில்லை?

அ. பிறப்பு, சாதி, மதம், இனம், நிறம், பாலினம் அடிப்படையில் பாகுபாடு இன்மை

ஆ. தேர்தலில் போட்டியிடும் உரிமை

இ. அனைவரும் சட்டத்தின்முன் சமமாக நடத்தப்படுதல்

**ஈ. பணக்காரர்கள் மற்றும் ஏழைகள் இடையில் சமத்துவமின்மையைக் காட்டுதல்**

2. கீழ்கண்டவைகளில் எது அரசியல் சமத்துவம் ஆகும்?

**அ. அரசாங்கத்திற்கு மனு செய்வது மற்றும் பொதுக்கொள்கைகளை விமர்சிப்பது.**

ஆ. இனம், நிறம், பாலினம் மற்றும் சாதி அடிப்படையில் சமத்துவமின்மை அகற்றப்படுதல்

இ. சட்டத்தின் முன் அனைவரும் சமம்

ஈ. சட்டம் கைகளில் செல்வம் செறிவு தடுப்பு

3. இந்தியாவில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும் வயது

அ. 21 **ஆ. 18** இ. 25 ஈ. 31

4. சாதி, பணம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதனால் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை

அ. இயற்கை சமத்துவமின்மை **ஆ. மனிதனால் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை**

இ. பொருளாதார சமத்துவமின்மை ஈ. பாலின சமத்துவமின்மை

5. சுவிட்சர்லாந்தில், பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்ட ஆண்டு

அ. 1981 **ஆ. 1971** இ. 1991 ஈ. 1961

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. குடிமை சமத்துவம் ________ க்கு முன்பு அனைவரும் சமம் என்பதைக் குறிக்கிறது.
2. ________ முதல் ________ வரையிலான இந்திய அரசியலமைப்புச் சட்டபிரிவுகள் சமத்துவ உரிமையைப் பற்றி குறிப்பிடுகின்றன.
3. தேர்தலில் போட்டியிடும் உரிமை என்பது _________ உரிமை ஆகும்.
4. சமத்துவம் என்பது முதலாவதாக__________ இல்லாததாகும்.

**விடைகள் : 1. சட்டத்திற்கு 2. 14,18 3. அரசியல் 4. சமூக சிறப்புரிமை**

**III. குறுகிய விடையளி**

**1. சமத்துவம் என்றால் என்ன?**

❖ சமத்துவம் என்பது ஒரு தனி மனிதன் அல்லது ஒரு குழு வேறுபாடு காட்டி நடத்தப்படாமல் இருத்தல் ஆகும்.

**2. பாலின சமத்துவம் ஏன் தேவையானது?**

❖ பெண்கள், ஆண்கள் சிறுவர், சிறுமியர், ஆகியோர் சமமான உரிமைகள் வாய்ப்புகள் பெற பாலின சமத்துவம் தேவையானது.

**3. குடிமை சமத்துவம் என்றால் என்ன?**

❖ அனைத்து குடிமக்களும் குடியியல் உரிமைகளை அடைதல் வேண்டும் என்பதே குடிமை சமத்துவம் ஆகும்.

**IV. விரிவான விடையளி**

**1. சமத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.**

- சமத்துவம் பலநூறு ஆண்டுகளாக மனித சமூகத்தை ஊக்குவித்து வழி நடத்திய ஆற்றல் வாய்ந்த நீதி மற்றும் அரசியல் கோட்பாடாகும்.
- சமத்துவம் என்ற கோட்பாடு மனித இனம் அதனுடைய சாதி, நிறம், பால், இனம் அல்லது தேசியம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து மனிதர்களும் சமமான மதிப்புள்ளவர்கள் என்ற கோட்பாட்டை அறைகூவுகிறது.
- மக்களாட்சிக் கோட்பாடுகளான சுதந்திரம், சமத்துவம் ஆகியவை நீதியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் போது மட்டுமே பொருளுடயவையாக இருக்கும்.

**2. அரசியல் சமத்துவம் என்றால் என்ன?**

இந்தியா உள்ளிட்ட அனைத்து மக்களாட்சி நாடுகளும் அவற்றின் குடிமக்களுக்கு அரசியல் உரிமைகளை உறுதியளிக்கின்றன. அவை பின்வருமாறு:

- வாக்களிக்கும் உரிமை
- .பொது அலுவலகத்தில் பங்குகொள்ளும் உரிமை
- .அரசை விமர்சனம் செய்யும் உரிமை

**3. இந்திய அரசியலமைப்பு சட்டம் சமத்துவத்திற்கானஉரிமையை எவ்வாறு பாதுகாக்கிறது?**

- உலகின் அனைத்து நாடுகளின் அரசியல் அமைப்புகளும் அதன் மக்களுக்கு சமத்துவத்தை உறுதி அளித்துள்ளன.
- இதே போன்று இந்திய அரசியலமைப்பு அதன் குடிமக்களுக்கு அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 14-18 மூலம் சமத்துவத்தை அளிக்கிறது.
- சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின்படி சமமான பாதுகாப்பு என்பது அரசியலமைப்பு சட்டப்பிரிவு 21 இல் மேலும் வலிமைபடுத்தப்பட்டுள்ளது.

## அலகு - II அரசியல் கட்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:**

1. இரு கட்சி முறை என்பது

அ. இரண்டு கட்சிகள் அரசாங்கத்தை நடத்துவது

ஆ இரண்டு உறுப்பினர் ஒரு கட்சியை நடத்துவது.

**இ. இரண்டு பெரிய அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவது.**

ஈ. இவற்றுள் எதுவும் இல்லை.

2. இந்தியாவில் காணப்படும் கட்சி முறை

அ ஒரு கட்சி முறை ஆ இரு கட்சி முறை

**இ. பல கட்சி முறை** ஈ. இவற்றுள் எதுவுமில்லை

3. அரசியல் கட்சிகளை அங்கீகரிக்கும் அமைப்பு

**அ. தேர்தல் ஆணையம்** ஆ. குடியரசுத் தலைவர்

இ. உச்சநீதிமன்றம் ஈ. ஒரு குழு

4. அரசியல் கட்சிகள் பொதுவாக எதன் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகின்றன?

அ. சமயக் கொள்கைகள் **ஆ. பொது நலன்**

இ. பொருளாதார கோட்பாடுகள் ஈ. சாதி

5. ஒரு கட்சி முறை எங்கு நடைமுறையில் உள்ளது?

அ. இந்தியா ஆ. அமெரிக்க ஐக்கிய நாடுகள் இ. பிரான்ஸ் **ஈ. சீனா**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மக்களாட்சியின் முதுகெலும்பாகத் திகழ்வது ____________.
2. நமது நாட்டின் ஒவ்வொரு கட்சியும்_________ என்ற அமைப்பில் பதிவு செய்தல் வேண்டும்.
3. அரசியல் கட்சிகள்__________ மற்றும் __________ இடையே பாலமாக செயல்படுகின்றன.
4. ஒரு பதிவு செய்யப்பட்ட ஆனால் _________________அரசியல் கட்சி தேர்தலில் தனது சின்னத்தில் போட்டியிட இயலாது.
5. எதிர்க்கட்சித் தலைவர்__________அந்தஸ்தில் இருப்பார்.

**விடைகள் : 1. அரசியல் கட்சிகள் 2. தேர்தல் ஆணையம் 3. குடிமக்களுக்கும், கொள்கை வகுப்பாளர்களுக்கும் 4.அங்கீகரிக்கப்படாத 5. கேபினெட் அமைச்சர்**

**III. பொருத்துக** **விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | மக்களாட்சி | அரசின் கொள்கைகளை விமர்சிப்பது | **மக்களின் ஆட்சி** |
| 2 | தேர்தல் ஆணையம் | அரசாங்கத்தை அமைப்பது | **சுதந்திரமான நியாயமான தேர்தல்.** |
| 3 | பெரும்பான்மைக் கட்சி | மக்களின் ஆட்சி | **அரசாங்கத்தை அமைப்பது** |
| 4 | எதிர்க்கட்சி | சுதந்திரமான நியாயமான தேர்தல். | **அரசின் கொள்கைகளை விமர்சிப்பது** |

**IV. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்வு செய்து பொருத்தமான விடையை தேர்வு செய்க**

1. பின்வரும் கூற்றுகளில் சரியானதை தேர்வு செய்க

அ. நாட்டில் உள்ள ஒவ்வொரு கட்சியும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

ஆ. தேர்தல் ஆணையம் அனைத்து கட்சிகளையும் சமமாக நடத்துகிறது.

இ. தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு தனி சின்னத்தை ஒதுக்குகிறது.

**ஈ. இவை அனைத்தும்.**

2. **கூற்று** : பெரும்பான்மை கட்சி ஒரு நாட்டின் சட்டங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**காரணம்** : தேர்தலில் பிறகட்சிகளைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது ஆகும்.

**அ. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்**

ஆ. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

இ. காரணம் தவறு, கூற்று சரி

ஈ கூற்று, காரணம் இரண்டும் தவறு.

**V. ஓரிரு வாக்கியங்களில் விடைகளை எழுதுக.**

**1. ஒரு அரசியல் கட்சியின் அடிப்படை கூறுகள் எவை?**

- தலைவர்
- செயல் உறுப்பினர்கள்
- தொண்டர்கள்

**2. மூன்று வகை கட்சி முறைகளைக் குறிப்பிடுக.**

- ஒரு கட்சி முறை: சீனா, வடகொரியா மற்றும் கியூபா
- இரு கட்சி முறை: பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள்
- பல கட்சி முறை: இந்தியா, பிரான்ஸ், ஸ்வீடன், நார்வே

**3. இரு கட்சி முறை காணப்படும் நாடுகளின் பெயர்களை எழுதுக.**

- பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**4. குறிப்பு வரைக : கூட்டணி அரசாங்கம்.**

- ❖ பல கட்சி அமைப்பில் சில நேரங்களில் ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையை ஒரு கட்சி பெறுவதில்லை. இதுபோன்ற நேர்வில் சில கட்சிகள இணைந்து அரசாங்கத்தைஅமைக்கின்றன. இது கூட்டணி அரசாங்கம்எ ன அழைக்கப்படுகிறது.

**VI. பின்வருவனவற்றிற்கு விடை அளிக்கவும்**

**1. அரசியல் கட்சியின் செயல்பாடுகளில் ஏதேனும் நான்கினை எழுதுக.**

- ❖ அரசியல் பிரச்சாரம், பேரணி ஆகியவற்றை ஏற்பாடு செய்தல்,தேர்தலில் வெற்றிபெற தேர்தல் அறிக்கையை வெளியிடுதல்.
- ❖ மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களையும் கொள்கைகளையும் முன்வைத்தல்.
- ❖ சமுதாயத்தையும் அரசையும் இணைத்தல். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களை ஒருங்கிணைத்தல்.
- ❖ அரசாங்கத்தை ஏற்படுத்தி இயக்குதல். பொதுவான கொள்கையை உருவாக்குதல்.

**2. ஒரு அரசியல் கட்சி எப்போது தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்படுகிறது?**

- ❖ மக்களவைத் தேர்தலில் அல்லது நான்கு மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தலில் 6 சதவீத வாக்குகளை பெற்றிருக்க வேண்டும்.
- ❖ ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களில் நான்கு மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.
- ❖ இறுதியாக நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் குறைந்தபட்சம் மூன்று மாநிலங்களில் 2 சதவீத தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.

**VII. உயர்சிந்தனைவினா**

**1. ஒரு மக்களாட்சி நாட்டிற்கு அரசியல் கட்சி அவசியமா?**

- ❖ அரசியல் கட்சிகள் மக்களாட்சியின் முதுகெலும்பு எனலாம்.
- ❖ அரசியல் கட்சிகள் முறையாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இல்லாமல் அரசாங்கத்தை அமைக்கும் முக்கிய காரணிகளாக இருக்கின்றன.
- ❖ அவை பொதுகருத்துக்களை உருவாக்குகின்றன.
- ❖ கட்சிகள் குடிமக்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையே பாலமாக சேவை செய்கின்றன.

**2. தேசிய கட்சி, மாநிலக் கட்சி மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சி ஆகியவற்றிற்கு சில உதாரணங்கள் தருக.**

**தேசிய கட்சிகள்:**

- ❖ பாரதீய ஜனதா கட்சி(BJP), இந்திய தேசியக் காங்கிரஸ்(INS), இந்திய பொதுவுடைமைக் கட்சி(CPI)

**மாநிலக் கட்சிகள்:**

- ❖ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்(ADMK), திராவிட முன்னேற்றக் கழகம்(DMK), தேசிய முற்போக்கு திராவிடக் கழகம்(தேமுதிக)

**அங்கீகரிக்கப்படாத கட்சிகள்:**

- ❖ ம.தி.மு.க, வி.சி.க, பா.ம.க, கொ.மு.க

# பொருளியல்

## அலகு - I உற்பத்தி

**I. சரியான விடையை தேர்ந்தெடுக்க**

1. உற்பத்தி என்பது

அ) பயன்பாட்டை அழித்தல் **ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்**
இ) மாற்று மதிப்பு ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

2. பயன்பாட்டின் வகைகளாவன

அ) வடிவப் பயன்பாடு ஆ) காலப் பயன்பாடு
இ) இடப் பயன்பாடு **ஈ) மேற்கண்டஅனைத்தும்**

3. உற்பத்தியின் மூலம் பொருட்களை பிரித்தெடுக்கும் தொழில்

**அ) இரண்டாம் நிலைஉற்பத்தி** ஆ) முதன்மை உற்பத்தி
இ) மூன்றாம் நிலைஉற்பத்தி ஈ) பணித்துறை உற்பத்தி

4. முதன்மைக் காரணிகள் என்பன ________

அ) நிலம், மூலதனம் ஆ) மூலதனம், உழைப்பு
**இ) நிலம், உழைப்பு** ஈ) எதுவுமில்லை

5. தொழில் முனைவோர் என அழைக்கப்படுபவர்

அ) பரிமாற்றம் செய்பவர் ஆ) முகவர் **இ) அமைப்பாளர்** ஈ) தொடர்பாளர்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ________ என்பது பண்டத்திற்கான விருப்பங்களை நிறைவு செய்யும் சக்தியாகும்.
2. பெறப்பட்ட காரணிகள் என்பது ________ மற்றும் ________ ஆகும்.
3. ________ என்பது நிலையான அளிப்பினை உடையது.
4. ________ என்பது மனித உற்பத்தியில் ஓர் இரு பொருள்.
5. ________ என்பது பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்திட மனித முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும்

**விடைகள்:** 1. **பயன்பாடு** 2. **முதலீடு, அமைப்பு** 3. **நிலம்** 4. **உழைப்பு** 5. **மூலதனம்**

**III. பொருத்துக.** **விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | முதன்மை உற்பத்தி | ஆடம்ஸ்மித் | **மீன்பிடித்தல், சுரங்கத் தொழில்** |
| 2 | காலப் பயன்பாடு | மீன்பிடித்தல்,சுரங்கத் தொழில் | **எதிர்கால சேமிப்பு** |
| 3 | நாடுகளின் செல்வம் | தொழில் முனைவோன் | **ஆடம்ஸ்மித்** |
| 4 | மனித மூலதனம் | எதிர்கால சேமிப்பு | **கல்வி, உடல்நலம்** |
| 5 | புதுமை புனைபவர் | கல்வி, உடல்நலம் | **தொழில் முனைவோன்** |

**IV. குறுகிய விடையளி**

**1. உற்பத்தி என்றால் என்ன?**

- நுகர்வோரின் பயன்பாட்டுக்காக, மூலப்பொருளையும், மூலப்பொருள் அல்லாதனவற்றையும் ஒன்றிணைத்து, ஒரு பொருளை உருவாக்கும் செயலே உற்பத்தியாகும்.

**2. பயன்பாடு என்பது என்ன?**

- பயன்பாடு என்பது, நமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதாகும்.

**3. பயன்பாட்டின் வகைகளை எழுதுக.**

- வடிவப் பயன்பாடு, இடப்பயன்பாடு, காலப் பயன்பாடு

**4. உற்பத்தியின் வகைகளைக் குறிப்பிடுக.**

- முதன்மை நிலை உற்பத்தி, இரண்டாம் நிலை உற்பத்தி மற்றும் மூன்றாம் நிலை உற்பத்தி

**5. உற்பத்திக்காரணிகளைக் கூறுக.**

- நிலம், உழைப்பு, முதலீடு, மற்றும் தொழில் முனைவோர்

**6. உழைப்பு வரையறு**

- வேலையினால் ஏற்படும் துன்பத்தைக்கருதாமல் கைமாறு எதிர்பார்த்து முழுமையாகவோ, பகுதியாகவோ உடல் அல்லது மனதால் பயன்கருதி மேற்கொள்ளும் முயற்சியே உழைப்பு ஆகும்.

**7. வேலைபகுப்பு முறை-வரையறு.**

- ஒரு உற்பத்தியை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவினரிடம் ஒப்படைத்தலே வேலைப்பகுப்பு முறை எனப்படும்.

**8. மூலதனத்தின் வடிவங்கள் யாவை?**

- பருமப்பொருள் மூலதனம் (அல்லது) பொருட்சார் மூலதனம்.
- பண மூலதனம் அல்லது பணவியல் வளங்கள்
- மனித மூலதனம் அல்லது மனிதத் திறன் வளங்கள்

**9. சமூதாய மாற்றம் காணும் முகவர் யார்?**

- தற்காலத்தில், தொழில் முனைவோர், “சமுதாய மாற்றம் காணும் முகவர்” என அழைக்கப்படுகிறார்.
- இவர் சமுதாய விருப்பமுள்ள உற்பத்தியைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாய நலம் மேம்படவும் காரணமாகிறார்.

**10. தொழில் முனைவோரின் பண்புகள் மூன்றினைக் கூறுக.**

- இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல்,
- புதுமைகளைஉருவாக்குதல்,
- இடர்களை ஏற்றல் மற்றும் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளல்.

**V. விரிவான விடையளி**

**1. உற்பத்தியின் வகைகளை விரிவாக எழுதுக**

**1. முதன்மை நிலைஉற்பத்தி**

- இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களை, நேரடியாகப் பயன்படுத்திச் செய்கின்ற செயல்பாடுகளுக்குட்பட்ட நிலையை முதன்மை நிலை உற்பத்தி என்கிறோம்.
- எ.காட்டு:- வேளாண்மை, மீன்பிடித்தல், சுரங்கத்தொழில், எண்ணெய் வளங்களைப் பிரித்தெடுத்தல்.

**2. இரண்டாம் நிலைஉற்பத்தி**

- முதன்மை நிலையின் உற்பத்திப் பொருள்களை மூலப்பொருள்களாகப் பயன்படுத்திப் புதிய உற்பத்திப் பொருள்களாக உருவாக்கும் செயல்பாட்டை இரண்டாம் நிலை உற்பத்தி என்கிறோம்.
- எ.காட்டு:- வாகன இரசாயண தொழிற்சாலைகள், நெசவு, பொறியியல் துறை சார்ந்த பணிகள், கட்டடப் பணிகள்.

**3. மூன்றாம் நிலைஉற்பத்தி**

- முதன்மை நிலை, இரண்டாம் நிலைகளின் உற்பத்திப் பொருள்களைச் சேகரிப்பதும் பரிமாற்றம் செய்வதும் மூன்றாம் நிலை உற்பத்தியாகும்.

- எ.காட்டு:- வாணிகம், வங்கி, காப்பீடு, போக்குவரத்து, செய்தித்தொடர்பு, சட்டம், நிருவாகம், கல்வி, உடல்நலப் பாதுகாப்பு

**2. நிலம் என்றால் என்ன? அதன் சிறப்பியல்புகளை விவரிக்க?**

- 'நிலம்' என்பது இயற்கை வளங்கள் அனைத்தையும் அல்லது இயற்கை மனிதனுக்கு இலவசமாகக் கொடுத்திருக்கும் கொடை அனைத்தையும் குறிப்பதாகும்.
- எ.காட்டு:- நிலப்பரப்பு, நீர், காற்று, காலநிலை

**நிலத்தின்சிறப்பியல்புகள்**

1. நிலம் இயற்கையின் கொடை
2. நிலத்தின்அளிப்பு நிலையானது
3. நிலம் அழிவில்லாதது
4. நிலம் ஓரு முதன்மை உற்பத்திக்காரணி
5. நிலம் இடம் பெயரக்கூடியதன்று
6. நிலம் ஆற்றல் வாய்ந்தது
7. நிலம் செழிப்புத் தன்மையில் மாறுபடும்

**3. வேலைபகுப்பு முறையின் நன்மைகள் மற்றும் தீமைகளை எழுதுக.**

**வேலைப்பகுப்பு முறையின் நன்மைகள்**

- உழைப்பாளி ஒருவர், ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதனால், அந்த வேலையில் திறமையுடையவராக ஆகிறார்.
- இம்முறை நவீன இயந்திரங்களை உற்பத்தியில் அதிகமாக ஈடுபடுத்துவதற்கு வழி வகுக்கிறது. உதாரணம் கம்பியில்லாத் தந்தியின் கண்டுபிடிப்பு
- காலமும், மூலப்பொருட்களும் மிகத் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**வேலைப்பகுப்பு முறையின் தீமைகள்**

- தொழிலாளி, ஒரே வேலையைத் திரும்ப, திரும்ப செய்வதால், சுவையற்ற, களிப்பற்ற, தன்மையை அடைகிறார். இது மனிதத் தன்மையை அழிக்கிறது.
- ஒரு பகுதி பணியினை மட்டும் ஒரு தொழிலாளி மேற்கொள்வதால், அவன் குறுகிய தேர்ச்சியை மட்டுமே பெறுகிறான். இதனால் வேலைவாய்ப்பின்மை பெருகும் நிலை உருவாகிறது.
- இம்முறை, கைவினைப் பொருட்களின் வளர்ச்சியினைப் பாதிக்கின்றது. ஒரு தொழிலாளி, ஒரு பொருளினை முழுவதுமாக உருவாக்கிய மன நிறைவினைப் பெறுவதில்லை.

**4. மூலதனத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.**

- மூலதனம் செயலற்ற ஓர் உற்பத்திக்காரணி
- மனித முயற்சியால் உருவாக்கப்படுகிறது
- இது உற்பத்தியில் தவிர்க்க முடியாத காரணியல்ல. இது இன்றியும் உற்பத்தி நடைபெறும்.
- மூலதனம் அதிகம் இயங்கும் தன்மையுடையது
- இதன் அளிப்பு நெகிழுந்தன்மையுடையது
- மூலதனம் ஆக்கமுடையது
- மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும்
- மூலதனத்தை ஈடுபடுத்துவதன் நோக்கம், எதிர்காலத்தில் வருமானம் பெற வேண்டும் என்பதேயாகும்.

**5. தொழில் முனைவோரின் பணிகளைக் கூறுக.**

- இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல்.
- உற்பத்தி அலகின் இருப்பிடத்தைத் தீர்மானித்தல்.
- புதுமைகளை உருவாக்குதல்.
- வெகுமதி செலவைத் தீர்மானித்தல்.
- இடர்களை ஏற்றல் மற்றும் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளல்.